REGISTERED No. M. 6165. ந. பை.

பத்ஹுல் இஸ்லாம்

FATH-HUL-ISLAM

மாதப் பத்திரிகை.

ஏப்ரல்—1962.

விஷயம்.		பக்கம்.
உடலிலும் உயிரிலும் உறையும் இறைவன்	...	1
ஹஜ்ரத் க்வாஜா முஈனுத்தீன் ஜீவிய சரிதை (டி. எப். ஆர். மஆலி ஸாஹிப் பாகவி)	... ...	9
யாஸ்மீன் (தொடர் கதை)	(ஏ. ஆர். கமால்)	13
தக்தாய்!	(வேளாங்கண்ணி கவிஞர் சாக்திதாசன்)	20
முஸ்லிம் மன்னர்களின் உபசார குணம் (சிறுவர் பகுதி) டி. எப். ஆர். மஆலி ஸாஹிப் (பாகவி)	...	21
திருக் குர்ஆன் சாரசங்கிரஹம்	(ரஹ்மத் பாகவி)	29

...ஸ்லாம் ஆபீஸ் :
...ட், திருவல்லிக்கேணி, மதராஸ் 5.

2 - AP...
JL
Q7m211, N24S5
M62
187087

பத்ஹுல் இஸ்லாம்.

சந்தா விபரம் : இந்தியா, பாகிஸ்தான், ஸிலோனுக்கு

வருஷ சந்தா ரூ. 1–50

தனிப் பிரதி நயா பைஸா 0–13

மற்ற வெளி நாடுகளுக்கு வருஷ சந்தா ரூ. 2–00

எல்லா ஊர்களிலும் ஏஜெண்டுகள் தேவை. எல்லா விஷயங்களுக்கும் கீழ்கண்ட விலாசத்திற்கு எழுதவும்.

மானேஜர்,
பத்ஹுல் இஸ்லாம்,
20, ஹைரோட், திருவல்லிக்கேணி, மதராஸ் 5.

புதிய மூன்றாம் பதிப்பு

நாகூர் மீரான் சாஹிபு ஆண்டவர்கள் காரண சரித்திரம்

இது ஹஸரத் ஸையிது அப்துல் காதிர் ஷாஹுல் ஹமீது மீரான் ஸாஹிபு ஆண்டவர்களின் ஜீவியமும், அவர்களின் அற்புதமாகிய கராமத்துகளும் ஒருங்கே கிடைக்கது. இது கோர்த்தியான காகிதத்தில் அச்சிடப்பட்டு அழகான பைண்டு செய்யப்பட்டது. விலை ரூ. 2–40

கிடைக்குமிடம்:—
ஹாஜி எம். எ. ஷாஹுல் ஹமீது அண்டு ஸன்ஸ்
கெ. 20, ஹைரோட், திருவல்லிக்கேணி, மதராஸ் 5.

பத்ஹுல் இஸ்லாம்

ஏப்ரல்—1962.

உடலிலும் உயிரிலும் உறையும் இறைவன்.

“மன் அரப நப்ஸஹு, பகத் அரப ரப்பஹு” (யார் தன்னுடைய உயிரை உணர்ந்து கொண்டானோ அவன் தன் இறைவனை உணர்ந்து கொண்டவனாகிறான்). (ஹதீது)

“இறைவனே’ உன்னை நான் வானில் தேடினேன்: சூரியனில் தேடினேன்; சந்திரனில் தேடினேன்; மேகத்தில் தேடினேன்; கடலின் அலையில் தேடினேன்; நெருப்பில் தேடினேன்; பிறகு இரவும் பகலும் உன்னை வாசல்கள் தோறும் தேடினேன். இறுதியில் யான் உன்னை உள்ளுக்குள்ளேயே கண்டு கொண்டேன்; வீணில் வெளியிலெல்லாம் தேடினேன்”.

இக்கருத்து கொண்ட ஓர் உர்தூ கவி புனைந்திருந்தேன் பல நாள்களுக்கு முன். அப்போது எனக்கு இதன் உட்பொருள் சரிவரப் புரியவில்லை. இப்போது ஒரு ஷெய்கே காமிலை, ஆத்ம ஞானியை அடைந்து ஆத்மார்த்தங்களைக் கேட்டறிந்ததில் மேற் கண்ட ஹதீதிலும், கீழ்க்கண்ட உர்தூ கவியிலும் அடங்கியிருக்கும் ஹகீகத் என்னும் உண்மை தெற்றென புலனாகத் தொடங்கி யிருக்கிறது.

இத்தத்துவத்தின்படி “இறைவனை எங்கே காணலாம்?” என்ற கேள்விக்கு, “உள்ளத்தில் காணலாம்” என்று ஒரே வார்த்தையில்

பதில் கூறி விடலாம். 'ஆனால் இது எப்படி?' என்று விளக்கம் கூறும் போதுதான், ஆதார ஆதேயங்களும் உதாரணங்களும் தேவைப்படுகின்றன.

* * * *

பண்டைப் பெரும் நபியாகிய இப்ராஹீம் அலைஹிஸ்ஸலாம் அவர்கள் விக்கிரகங்கள் செய்து விற்கும் ஒரு சிற்பியின் வீட்டில் பிறந்தார்கள். பால்யத்தில் இப்ராஹீமும் தனது தந்தையுடன் சேர்ந்து சிலைகள் செய்யும் தொழிலில் ஈடுபட்டிருந்தார். அக்கால விக்கிரக வழிபாட்டுக்காரர்கள், இறைவனைக் கற்பனை செய்து கொண்ட பிரகாரமெல்லாம் உருவச்சிலைகளை, செம்பாலும் பொன்னாலும், கல்லாலும், கட்டையாலும் வடித்துக் கொடுத்துக் கொண்டிருந்தார்கள்.

தினமும் ஒரு சிலையை வைத்து வணங்கிக் கொண்டிருந்தனர் அக்கால விக்கிரஹத் தொழும்பர். சூரியன், சந்திரன், அக்கினி, வருணன், கல்வி, செல்வம், காத்தல், அழித்தல் அனைத்திற்கும் ஒவ்வொரு தனித்தனி தெய்வங்களை ஏற்படுத்திக் கொண்டு, ஒவ்வொன்றிற்கும் ஒவ்வொரு விதமான தோற்றம் உருவம் கோலம் தந்து, உருவச்சிலைகளைச் செய்து வைத்துக் கொண்டு வணங்கி வந்தனர் அக்கால மாந்தர்.

நபி இப்ராஹீம் அலைஹிஸ்ஸலாம் அந்த மூட ஜனங்களுக்கிடையில் பிறந்தவராயினும், இவர் இந்த உருவங்களில் தெய்வத்தன்மை கிடையாதென்பதை உணர்ந்து கொண்டார். தன்மேல் ஒரு ஈ உட்கார்ந்தால் அதை விரட்டுவதற்குக்கூட சக்தியற்ற உருவச்சிலைகளை, இறைவன் என்று எப்படி ஏற்றுக்கொள்ள முடியும்? என்று அறிவு கொண்டு ஆராயத்தொடங்கினார்.

சிற்பகூடத்தில் பன்னூற்றுக் கணக்கான சிலைகள் செய்து தயாரில் வைக்கப்பட்டிருந்தன. ஒரு நாள், இரவில் இப்ராஹீம் நபி அந்த சில்ப கிரஹத்துக்குள் நுழைந்தார். அந்தக் கற்சிலைகளை நோக்கினார்; அவைகளுக்குப் பேசவேணும் அசையவேணும் சொல்வதைக் கேட்க வேணும் சக்தி யிருக்கிறதா என்று பரீக்ஷித்துப் பார்த்தார். அவைகளெல்லாம் அசைவற்று அறிவற்று அசேதனப் பொருட்களாய் கிடப்பதைக் கண்டார். புகழுக்கும் அவை மகிழவில்லை; இகழுக்கும் அவை இளைக்கவில்லை. எனவே நபியவருக்குக் கோபம் வந்து விட்டது; கல் பிளக்கும் கோடரியை எடுத்தார். ஒவ்வொரு

சிலைகளாக எல்லாச் சிலைகளையும் உடைத்து தூளியாக்கி சேதப் படுத்தி சின்னபின்னமாகச் செய்து தீர்த்து விட்டார். இறுதியாய் கோடரியை பெரிய சுவாமியினுடைய கையில் தொங்க விட்டு வெளியே வந்து விட்டார்.

மறுகாட்காலை இப்ராஹீமின் தந்தை ஆஸர் அவர்கள், சிற்பச் சாலையில் போய்ப் பார்த்து, காலாகோலத்தைக் கண்டு திடுக்கிட்டு, மைந்தர் இப்ராஹீமை அழைத்து "இதெல்லாம் என்ன விபரீதம்; இதையெல்லாம் உடைத்துப் போட்டது யார்?" என்று கேட்டார். அதற்கு இப்ராஹீம் "அதோ பெரிய சாமி இருக்கிறதே; அதுதான் கோடரியைக் கையில் வைத்துக் கொண்டிருக்கிறது. அதைக் கேட்டுப் பாருங்கள், பதில் சொல்லும்" என்று பதில் சொன்னார். அதற்கு அவர், "மகனே இதற்கெல்லாம் பேச சக்தி இல்லையே; எப்படி பதில் சொல்லும்?" என்று மீண்டும் கேட்டார். "இவை களுக்குப் பேச சக்தி இல்லை; செயல் புரியும் ஆற்றலும் இல்லை என்பதைத் தெரிந்துமா, தாங்கள் இவைகளைச் சிருஷ்டித்துத் தொழுது வணங்கிக் கொண்டிருக்கிறீர்களே?" என்று கேட்டார். அதற்குத் தந்தை ஆஸர் "ஆம், வயிற்றுப் பிழைப்புக்காக நான் இத்தொழிலை மேற்கொண்டிருக்கிறேன். ஜனங்களுடைய கட்டுப் பாட்டுக்குப் பயந்தே வணங்கிக் கொண்டிருக்கிறேன்" என்று பதில் அளித்தார்கள்.

"அப்பா, நான் உண்மைத் தெய்வத்தைக் கண்டறியப் போகிறேன்; சகல சக்தியும் உடைய இறைவனைக் கண்டறியப் போகிறேன்" என்று சொல்லிவிட்டு, நாட்டை விட்டுக் காட்டுக்குப் போய் விட்டார்கள். காட்டில் போய் இயற்கைக் காட்சிகளை எல்லாம் கண்டு அறிந்து உணர்ந்து "மகாசக்தியுடைய உண்மைத் தெய்வம் எது?" என்று ஆராயத் தொடங்கினார்கள்.

முதலில் சூரியனைக் கண்டார்கள்; இதுதான் மகாப்பெரும் தெய்வம் என்று எண்ணி அதன் கிரணங்களையும் வெளிச்சத்தையும் உஷ்ணத்தையும், அதனால் சகல ஜீவன்கள் பயன் அடைவதையும் கண்டா ந்தித்துக் கொண்டிருந்தார்கள். மாலை நேரமாயிற்று. சூரியனின் சுடர் குன்றிக் கொண்டு வந்தது; உஷ்ணம் தணிந்து விட்டது; பிரகாசம் மங்கி விட்டது; காலை மிகத் துலக்கமாக கதிர் பரப்பிக்கொண்டு வானத்தில் பிரகாசித்து ஆட்சி புரிந்து

கொண்டிருந்த சூரியன் மங்கி, ஒளி குன்றி, மேற்குத் திசையில் மறைந்து ஒளிந்து ஒழிந்து போனதால், "உண்மைத் தெய்வம் இது இல்லை; இதற்கு மகா சக்தி கிடையாது" என்று முடிவு செய்து உட்கார்ந்து விட்டார்.

சிறிது நேரத்தில் சந்திரன் தண்ணென்ற ஒளி பரப்பிக் கொண்டு வெளிவந்தான். சூரியனைவிட இது குளிர்ச்சியாக மனதுக்கு சாந்தியளிப்பதாய் இருந்ததால், அதைவிட இது பெரிய சக்தியுடையது என்று நினைத்து அதைப்போற்றி வழிபட்டுக் கொண்டிருந்தார். அதிகாலையில் அதுவும் மறைந்தொழிந்ததால், இதெல்லாம் உண்மைத் தெய்வமில்லை; இதை யெல்லாம் இயற்கையின் நியதிப்படி சிருஷ்டித்து, இயங்கவைத்து மறைந்திருந்து பராபரம் அனைத்தையும் ஆட்சி புரிந்து கொண்டிருக்கும் மகாசக்தி வாய்ந்தவனே உண்மை இறைவன், அவனே வணங்குவதற்குரிய ஏக நாயன் என்று முடிவு செய்தார்.

இப்பிரபஞ்சத்தில் ஆதியில் முதன் முதன் தெய்வம் "ஒன்றே, நாயன் ஒருவனே; அனைத்தையும் படைத்த ஆண்டவன் ஒருவனே சகலத்தையும் காக்கும் கடவுள் ஒருவனே; அனைத்தை அணைத்துக் காத்துப் பராமரிக்கும் இறைவன் ஒருவனே; அவனே அல்லாஹுதஆலா" என்ற இணையிலாத் தத்துவத்தை உணர்ந்து போதிக்கத் தொடங்கியவர் நபி இப்ராஹீம் (அலை) அவர்களே யாவர். அவர்கள் போதித்த ஏக தெய்வக் கொள்கைதான், இஸ்லாமிய தவ்ஹீத்—வஹ்தத் என்னும் வஹ்தானியத் ஆகும். இஸ்லாத்திற்கு ஆதி போதகராக விளங்கியவர் இப்ராஹீம் நபியே யாதலால் முஸ்லிம்களாகிய நாமெல்லாம் மில்லத்தே இப்ராஹீமைப் பின்பற்றும் இயற்கை மதத்தினராய் இருந்து வருகிறோம். நமது நபிகள் நாயகம் முஹம்மத் ரஸூலுல்லாஹி (ஸல்லல்லாஹு அலைஹிவஸல்லம்) அவர்களும் இந்தப் புனித தீனையே நிலைநிறுத்தி இஸ்லாத்தை கோட்டையாக்கி வைத்தார்கள். "ஒன்றே குலம்; ஒருவனே தேவன்" என்ற கொள்கையுடையவர்கள் இதர சமூகங்களிலும் இருக்கிறார்கள். இவர்கள் காபிர்களாகவும், முஷ்ரிக்குகளாகவும் இருந்தபோதிலும் ஒரு சில கோட்பாடு விஷயங்களில் மட்டும் தீனுல் இஸ்லாத்தின் பக்கம் நெருங்கி வந்து கொண்டிருக்கிறார்கள்.

*   *   *   *

கிறிஸ்துவர்கள் "அல்லாஹ் ஒருவனே இணையற்ற தேவன்" என்று ஒத்துக் கொண்டிருந்த போதிலும், இறைவன் சம்பந்தப் பட்ட அகீதாவில் திரியேகத்துவம் என்ற முக்கூட்டு தெய்வக் கொள்கையையும் வந்து குழப்பிக் கொண்டு அவதியுறுகிறார்கள். ஈஸா நபியை தேவகுமாரன் என்று சொல்லி அல்லாஹ்வை ஒரு தகப்பனாக்கி விட்டார்கள். ஈஸா நபியை தேவகுமாரன் என்று சொல்கிறார்கள்.

சைவசித்தாந்திகளாகிய சிவன் அடியார்களான ஹிந்துக்கள் கூட சுப்பிரமணிய சுவாமியை பரம ஈஸ்வரனாகிய சிவ பிரானுடைய பிள்ளை (சிவகுமாரர்) என்று சொல்லுகிறார்கள்.

இவ்வாறே தான் யூதர்களும் மஜூஸியர்களும் புத்தர்களும் ஜைனர்களும் மற்ற சமயத்தவர்களும் ஏக இறைவனாகிய அல்லாஹு தஆலாவுடன் கூட்டான தெய்வங்களைச் சேர்த்துக் கொண்டு வழி கேடர்களாகவும், முஷ்ரிக்குகளாகவும், சத்தியம் தவறியவர்களாக வும் போய் விட்டனர். எனவே, இஸ்லாத்தில் மட்டும்தான் பரி சுத்த தெய்வக்கொள்கையும், ஏகத்துவம் என்னும் தவ்ஹீதும் பரி பூரணமாய் நிலைத்திருந்து இலங்கி வருகின்றது.

கண்டதை யெல்லாம் தெய்வம் என்று கை கூப்பித் தொழுது பக்தி கொண்டாடி யுழல்வது ஒருவகை. தெய்வமே இல்லையென்று நாத்திகம் பேசிக் கொண்டலையும் நாசகாரக் கும்பல்கள் புரியும் பாபக் கிருத்தியப் போக்கு ஒருவகை. ஏகதெய்வமாகிய அல்லாஹு தஆலா மீது ஈமான் கொண்டிருந்தும், அந்த ஏகவல்லோனிடம் எல்லாவற்றையும் கேட்டு அவனையே தொழுது வணங்கி வழிபடு வதினூடே ஜண்டாக்களிடமும், பஞ்சாக்களிடமும், பீர்களிடமும் போய் உதவி கேட்டுக் கொண்டு அல்லாஹ்வின் பரிசுத்தத்திற்குக் களங்கத்தை யுண்டுபண்ணும் இஸ்லாமானவர்கள் என்போர் ஒரு வகை. இன்னோர் எல்லாரும் கண்ணிருந்தும் குருடர்களாகவும், காதிருந்தும் செவிடர்களாகவும், வாயிருந்தும் ஊமையர்களாகவும், அறிவிருந்தும் மூடர்களாகவும் கருதப்படுகிறவர்களாவர்; இவர்கள் ஒருபோதும் ஈடேற்றமடைய மாட்டார்கள்.

* * * *

எல்லா மதத்தினருமே இறைவனை அடைய வேண்டும், இறை வனின் அருளைப் பெறவேண்டும் என்ற கொள்கையுடையவர்கள் தான். ஆனால் அவர்கள் போகும் போக்கு, சத்தியத்தை விட்டு

வழிகழுவியதாகவே இருக்கிறது. உண்மையை யறிய உண்மையின் பக்கம் செல்ல வேண்டும்; தவருன வழியில் உண்மையைக் கண்டறிய முடியாது. ஆகவே முதல் பாதை, நேர்மையானதாய்—அறநெறி வாய்க்ததாய், ஒழுக்கம் மிகுந்ததாய் இருக்க வேண்டும்.

இஸ்லாத்தின் பாதை நேர்மையானதாகும்; அறநெறியில் சிறந்ததாகும், ஒழுக்கமுடையதாகும். இதையே 'ஷரீஅத்' என்று சொல்லுகின்ருேம். இஸ்லாத்தில் இறைவனை அடையும் பாதையில் நான்கு மன்ஜில்கள் (பதவிகள்—தங்குமிடங்கள்—ஸ்டேஷன்கள்) உண்டு. அவை (1) ஷரீஅத் (2) தரீக்கத் (3) மஃரிபத் (4) ஹகீகத் என்பவையாகும். முதல் ஸ்டேஷனைக் கடக்காமல், ரயில் வண்டி இரண்டாவது ஸ்டேஷனை அடைய முடியாது; இரண்டாவதை விட்டு மூன்ருவதை அடைய முடியாது; மூன்ருவதை விட்டு நான்காவதை அடைய முடியாது. 'தவ்ஹீது' என்னும் தண்டவாளத்தின் மீது அமைக்கப்பட்ட இஸ்லாமியப் பாதையே ஷரீஅத் தாகும்; தரீக்கத்தை அடைவதற்கும், மஃரிபத்தை யுணர்வதற்கும் ஹகீகத்தை அனுபவிப்பதற்கும் மனிதனுடைய ருஹானியத் என்னும் ரயில் என்ஜின் ஷரீஅத்துடைய தண்டவாளத்தின் மீது ஓடியே ஆக வேண்டும்.

எனவே, யாரேனுமொருவர் "நாங்கள் தரீக்கத்தில் இருப்பவர்கள்; நாங்கள் மஃரிபத்துக்காரர்கள் எங்களுக்கு ஷரீஅத்து வேண்டியதில்லை" என்று சொல்வார்களானல் அவர்கள் தண்டவாளம் இல்லாமல் நேர் பாதையில்லாமல் இலக்ஷியம் இல்லாமல் பதவி இல்லாமல் கண்ணை மூடிக் கொண்டு கட்டாந்தரையில் மேடு பள்ளம் மலைக்காடுகளில் இரயில் வண்டியை ஓட்டிக் கொண்டு போக முயல்பவர்களேயாவர்.

* * *

ஷரீஅத்தில் இருந்து கொண்டே இறைவனை உணர வேண்டும்; இஸ்லாத்தின்படி நடந்து கொண்டே நாயனை அறிய வேண்டும். இதுதான் உண்மையான தஸவ்வுப்; இதுதான் உண்மையான தரீக்கத். இதன் மூலம்தான் ஹகீகத்தை அறியும் மஃரிபத் என்னும் மெஞ்ஞானம் சித்தியாகும்.

இனி இறைவனை அறிந்து கொள்வது சிரமம் இல்லை; இறைவனை அறிய அலைந்து திரிய வேண்டியதில்லை; அண்டகோளத்தை

ஆராய வேண்டியதில்லை; பூமியைக் குடைந்து பார்க்க வேண்டியதில்லை; அணுவைப் பிளந்து ஆராய்ச்சிப் புரிய வேண்டியதில்லை.

இறைவனை அறிய முதலில் நம் உடலை அறிய வேண்டும்; பிறகு அந்த உடலை இயங்கவைக்கும் உயிரை அறிய வேண்டும்; பிறகு அந்த உயிரின் உறைவிடம் எது வென்று அறிய வேண்டும். உடலிலுள்ள உயிர், உடலை விட்டுப் பிரிந்துவிடும் போது அது எங்கு போய் உறைகிறது என்பதை உணர வேண்டும். உடலையும் உயிரையும் உணர்ந்தவனே இறைவனை அறிந்தவனாவான் என்பது முற்றும் உண்மை.

நம் உடலுக்குள் இறைவன் இருக்கிறானா? நம் உயிருக்குள் இறைவன் உறைந்திருக்கிறானா? என்பதை எப்படி அறிவது? மேலே தலைப்பில் கூறிய ஹதீதுக்கருத்தையும், உர்து கவியின் விழுமிய பொருளையும் மீண்டும் படித்து சிந்தித்துப் பாருங்கள்.

"தன் 'நப்ஸை' அறிந்தவன் தன் 'ரப்பை' அறிந்தவனாவான்" என்பது ஹதீது போதனை.

"இறைவனைத் தேடி, காடு மலையிலும், சூரியன் சந்திரனிலும் தரையிலும் கடலிலும், மஸ்ஜிதிலும் கோயிலிலும் அலைய வேண்டாம். உன் உள்ளுக்குள்ளேயே இறைவனைக் கண்டு கொள்ளலாம்" என்பது உர்து கவியின் கருத்துரை.

"இறைவனாகிய நாம் பிடரி நரம்பைவிட மிக சமீபத்திலேயே இருக்கிறோம்" என்று அல்லாஹு தஆலா திருக்குர்ஆனில் கூறுகின்றான். "நஹ்னு அக்ரபு இலைஹிமின் ஹப்லில் வரீது" என்பது ஆயத்து.

பிடரி நரம்பில் இரத்தம் ஓடிக் கொண்டிருக்கிறது; அந்த இரத்தத்தின் மூலம் உடலில் உயிர் ஊசலாடிக் கொண்டிருக்கிறது. உடலை விட்டாலும், இரத்தத் தொடர்பு அற்றாலும் உயிர் சாஸ்வதமாய் இறைவனுடன் கலந்து உறைந்து கொண்டிருக்கும்; எனவே ஜீவித்தும் நாம் இறைவனை அடையலாம், மரித்தும் இறைவனை அடையலாம்; நாம் ஆதியிலும் இறைவனோடு இருந்தோம்; மரித்தும் இறைவனோடு இருப்போம்; இறைவனை விட்டு நாம் பிரிவதில்லை; நம்மை விட்டு இறைவன் பிரிவதில்லை. இதை ஆழ்ந்து உணர்வதே மஃரிபத் ஆகும்; இதுவே ஹகீகத்.

மிப்தாஹுஸ்ஸலாஹ் பீ யீலாஹின்னிகாஹ்

(இப்புத்தகம் இல்லறவாசிகள் ஒவ்வொரு வருக்கும் அவசியம் வேண்டியது)

இதில் நிக்காஹுடைய வரிசைகளும், அஹ்காம் களும், ஸ்திரீ புருஷருடைய குணலக்ஷணங்களும், ஒவ்வொருவரும் இன்ன குணமுடையவர்களென்று பார்த்த மாத்திரத்தில் கண்டறியக் கூடிய வழியும், ஸ்திரீ, புருஷர்கள் அவசியம் அறிய வேண்டிய அநேக ரகசியங் களும், ஒரு புருஷன் விரும்பிய மனைவியையும், ஒரு ஸ்திரீ விரும்பிய கணவனையும் அடைவதற்கு வேண்டிய இஸ்மு களும் அடங்கி யிருக்கின்றன.

இவை யன்றி ஸ்திரீ புருஷருக் கிடையில் முஹப்பத் உண்டாவதற்கும் ஹமல் உண்டாவதற்கும், ஹமலைக் காப்பதற்கும் அவசியமான இஸ்முகளும், ஹமலில் உண்டாகக் கூடிய பலவகை வியாதிகளுக்கு அரிய ஔஷதங்களும் கூறப்பட்டிருக்கின்றன.

முன் பதிப்பிலிருந்ததைவிட இப்பதிப்பில் அநேக அரிய விஷயங்களும் இஸ்முகளும் சேர்க்கப்பட்டிருக் கின்றன.

புதிய பதிப்பு கிளேஸ் காகிதம் கலிகோ பைண்டு

இதன் விலை ரூ. 3-00

கிடைக்குமிடம்:—

ஹாஜி எம். எ. ஷாஹுல் ஹமீது அண்டு ஸன்ஸ்

கெ. 20, ஹைரோட், திருவல்லிக்கேணி, மதராஸ் 5.

ஹஜ்ரத் 'க்வாஜா' முயீனுத்தீன் சிஷ்தி (ரஹ்) அவர்கள் ஜீவிய சரிதை.

(டி. எப். ரஹ்மத்துல்லாஹ்–மஆலி சாஹிப் (பாகவி)

27—ம் பாகம்

நெருப்பை வணங்கும் எழு பேர் ஈமான் கொண்ட வரலாறு.

அஜ்மீர் அண்ணல் ஹஜ்ரத் க்வாஜா முயீனுத்தீன் சிஷ்தி (றஹ்) அவர்கள், பக்தாதில் போதனை செய்து கொண்டிருந்த காலத்தில் ஓர் அரிய சம்பவம் நடைபெற்றது.

அப்போது ஹஜ்ரத் க்வாஜா சாஹிப் (றஹ்) அவர்கள் ஓர் இடத்தில் தங்கி யிருந்தார்கள்.

அக்காலத்தில் நெருப்பை வணங்கும் ஜாதியாரான மஜூஸியர்கள் (ஆதஷ் பரஸ்த்) என்பவர்களின் செல்வாக்கு அதிகமாக இருந்தது. ஆதஷ்பரஸ்த் என்பவர்கள், ஆரிய வர்க்கத்தைச் சேர்ந்தவர்கள்; ஹிந்துக்களுடைய ஒரு பிரிவைச் சேர்ந்தவர்கள்.

இவர்கள் அக்னி பூஜை செய்வார்கள்; பட்டினி கிடந்து கடும் தவம் புரிந்து, நெருப்பை வளர்த்து அக்கினிஹோத்ரம் புரிந்து அற்புதமான காரிய சித்தியடைவார்கள். இங்ஙனம் சாதனை செய்து, ஜனங்களுக்கு அற்புதக் காரியங்களைச் செய்து காட்டுவார்கள். அதாவது நெருப்பைத் தொடுவார்கள். நெருப்பைக் கையில் எடுப்பார்கள்; நெருப்பு மீது நடப்பார்கள். "நாங்கள் நெருப்பை நமஸ்கரிப்பதால் அது எங்களை ஒன்றும் செய்யாது" என்று சொல்வார்கள்.

இப்படிப்பட்ட ஆதஷ்பரஸ்த்களில் எழு பேர், ஒரு முறை நமது, ஹஜ்ரத் க்வாஜா முயீனுத்தீன் (றஹ்) அவர்கள் சமுகத்துக்கு மகா படாடோபத்துடன் வந்தார்கள். தங்களுடைய காரிய சாதனைக் கொண்டும் படாடோபத்தைக் கொண்டும் ஹஜ்ரத் அவர்களைத் தலை குனியச் செய்துவிட வேண்டுமென்பது அவர்கள் எண்ணம்.

எனவே, ஹஜ்ரத் அவர்களுடைய திருச்சமுகத்தில், அடக்க ஒடுக்க மரியாதை யின்றி சாதாரணமாகவே வந்து நின்றார்கள். இவர்கள் எந்த நோக்கத்துடன் வந்திருக்கிறார்கள் என்பதை ஹஜ்ரத் அவர்கள், தமது கஷ்பு என்னும் ஞானதிருஷ்டியால் உணர்ந்து கொண்டார்கள். எனவே, ஹஜ்ரத் அவர்கள் வந்தவர்களை ஞான தீச்சுடர் கண் கொண்டு நோக்கினார்கள். உடனே அவர்கள்

உடல் நடுக்கம் கொண்டு, கைகால்கள் உதறல் எடுத்துக் கொண்டு, சோர்ந்து போய், உடனே ஹஜ்ரத் அவர்களிடம் சிரம்பணிந்து, திருப்பாதங்களில் வீழ்ந்து மரியாதை தெரிவித்துக் கொண்டார்கள்.

சம்வாதமும் ஈமானும்.

அதன் பிறகே ஹஜ்ரத் அவர்கள் அன்னவர்களுடன் மனம் லயித்துப் பேசத் தொடங்கினார்கள். இவர்களுக்கிடையில் சம்வாதம் நடைபெற்றது அதன் விபரமாவது:—

ஹஜ்ரத்: நீங்கள் ஏக இறைவனை (அல்லாஹ்)வை விட்டு, அணைந்து போகும் நெருப்பை பூஜித்து வணங்கிக் கொண்டிருக்கிறீர்களே ஏன்? இதனால் உங்களுக்கு ஆத்மார்த்தமாய் என்ன பிரயோஜனம் உண்டாகிறது?.

மஜூஸியர்: நெருப்பு சுட்டுவிடும் குணமுடையது; நாம் இறந்தபின் நரகத்து நெருப்பில் பாபிகளுக்குத் தண்டனை கிடைக்குமல்லவா? நெருப்பை நமஸ்கரித்துப் பணிந்து வணங்கினால் அது எங்களைச் சுட்டுக் கரிக்காது; தண்டிக்காது, நெருப்பை விட்டும் எங்களுக்கு ஈடேற்றம் கிடைக்கும் என்பதற்குத்தான் இதனை வணங்குகிறோம்.

ஹஜ்ரத்: பேதை ஜனங்களே, அடிப்பவனுக்குப் பயப்படாமல், அடிப்பவனின் கைக் கருவியான கோலுக்கா பயப்படுகிறீர்கள். நெருப்பைப் படைத்தவன் சர்வ சக்தியுடையவனான அல்லாஹுத ஆலா; நரகமும் நரகிலுள்ள நெருப்பும் அவனது கட்டளைப்படி நடப்பவையாகும். அப்படிப்பட்ட இறைவனைத் தொழுது வணங்காமல், அணைந்து போகும் நெருப்பை வணங்குவதால், பிற்கால ஆகிரத்தில் உங்களுக்கு ஒரு போதும் 'நஜாத்' என்னும் ஈடேற்றம் கிடைக்க மாட்டாது.

மஜூஸியர்: அப்படியா சமாசாரம்? தாங்கள் நெருப்பைப் படைத்த அல்லாஹ்வை வணங்குகிறீர் என்கிறீர்களே, நெருப்பு உங்களைச் சுடாதா? நெருப்பினால் உங்களுக்குத் தீங்கு நேரிட மாட்டாதா?

ஹஜ்ரத்: (ஆக்ரோஷத்துடன்) அல்லாஹ்வை மனத்தால் துதித்து வணங்கித் தொழும் எம்முஸ்லிம்களை, கேவலம் நெருப்பு என்ன செய்து விடும்? என்னுடைய செருப்பைக்கூட அது கரிக்காது; அதற்குள்ள எரிக்கும் சக்தியைவிட, அதைத் தணித்து அடக்கும் சக்தி என் செருப்புக்கு உண்டு' என்று ஹஜ்ரத் அவர்கள் சொல்லி, அங்கு அருகில் அந்த ஆதஷ்பாஸ்களால் வேள்வி மூட்டி எரித்துக் கொண்டிருந்த அக்கினி குண்டத்தில் தன்னுடைய கால் செருப்பை விட்டெறிந்தார்கள்.

செருப்பு நெருப்பு குண்டத்தில் விழுந்ததும் சுடர் விட்டு ஜுவாலை எழுப்பி எரிந்து கொண்டிருந்த அக்கினி அணைந்து

விட்டது. இதைக் கண்டு அவர்கள் திடுக்கிட்டு விட்டார்கள். ஹஜ்ரத் அவர்களிடம் அன்னவர்களுக்கு அபாரமான விசுவாசம் ஏற்பட்டு விட்டது.

ஹஜ்ரத் க்வாஜா சாஹிப், அவர்களை அன்புடன் நோக்கி “பார்த்தீர்களா, அக்கினி அணைந்து விட்டது. இது என் செருப்புடைய மகிமை யில்லை, என்னுடைய மகாத்மியமில்லை; என்னையும் உங்களையும் இந்த நெருப்பையும் அந்த செருப்பையும், உலகத்து சகல வஸ்துக்களையும் படைத்த ஏக வல்லோனான அல்லாஹு ஜல்ல ஷானுஹு தஆலாவுடைய குத்ரத்தே மகாப்பெரும் அற்புதமாகும். அவனுடைய மகிமையினால் தான் இந்த நெருப்பு அணைந்தது” என்று இதோபதேசம் செய்தார்கள்.

அவர்கள் ஏழு பேர்கள் இந்தக் காரமத்தைக் கண்ணாரக் கண்டு, மனப்பூர்வமாய் கலிமா ஷஹாதத் ஓதி ஹஜ்ரத் அவர்கள் முன் ஈமான் கொண்டு முஸ்லிமாய் விட்டார்கள்.

பிறகு இவர்களையும் ஹஜ்ரத் க்வாஜா சாஹிப் (ரஹ்) அவர்கள் தங்கள் முரீதீன்களுடைய ஹல்காவில் சேர்த்துக் கொண்டார்கள். அவர்களில் ஒருவருக்கு விலாயத்துடைய பதவியும் அளிக்கப் பட்டது.

ஒரு சிறுவனைப் பார்த்து, ‘வருங்கால மன்னனாவான்’ என்று வரும்பொருள் கூறியது.

ஒரு நாள் ஹஜ்ரத் க்வாஜா முஈனுத்தீன் சிஷ்தி (ரஹ்) அவர்கள், தமது திருச்சபை கூடி உட்கார்ந்து இதோபதேசம் (இர்ஷாத்) புரிந்து கொண்டிருந்தார்கள். அத்திருச்சபையில் (மஜ்லிஸில்) ஷெய்கு அவ்ஹதுத்தீன் கிர்மானி, இன்னும் ஷெய்கு ஷஹாபுத்தீன் ஸுஹர்வர்தி (ரஹ்மத்துல்லாஹி அலைஹிம்) ஆகிய பெரியவர்களும் உட்கார்ந்து உரையாடிக் கொண்டிருந்தார்கள்.

அப்போது, ஒரு சிறுவன் மிக வீரத்துடன் கையில் வில்லும் அம்பும் ஏந்தியவனாக அவ்வழியே வந்து ஹஜ்ரத் அவர்களுக்கு ஆதாபு மரியாதை செய்து விட்டுப்போனான். அந்தச் சிறுவன் பெயர் ‘ஷம்சுத்தீன்’ என்பதாகும்.

ஹஜ்ரத் க்வாஜா சாஹிப் அவர்கள், அந்தச் சிறுவனின் இன் முகத்தை கூர்ந்து நோக்கினார்கள்; அவனுடைய இலக்ஷணங்களை ஆராய்ந்து பார்த்தார்கள். அப்போது கஷ்பினால் அச்சிறுவனின் வருங்கால வாழ்வு அனைத்தும் ஹஜ்ரத் அவர்களுக்கு கண்ணாடியில் கண்ட பிரதிபிம்பக் காட்சிபோல் எளிதில் புலனாகி விட்டது.

எனவே, ஹஜ்ரத் அவர்கள் சபையோரை நோக்கி “பார்த்தீர்களா, ஷம்சுத்தீன் என்னும் இச்சிறுவன் வருங்காலத்தில் ஒரு பாதுஷாவாக விளங்குவான். அதாவது ஹிந்துஸ்தான் என்னும்

காபிர்களுடைய தேசத்தை, தன் வீரப்பராக்கிரமத்தினால் பிடித்து இஸ்லாமிய ஆட்சி நடத்தி பாதுஷாவாக விளங்குவான்" என்று வரும்பொருள் (பஷாரத்) கூறினார்கள்.

அங்ஙனமே அவர்கள் வாக்கு மெய்மொழியாகத் திகழ்ந்தது. எப்படியெனில் வெகு நாட்களுக்குப் பிறகு, ஹிந்துஸ்தான் என்னும் இந்திய நாட்டில் சுல்தான் ஷம்ஸுத்தீன் அல்தமஷ் என்ற மன்னராய் விளங்கி சுமார் 26 வருஷ காலம் இந்தியாவின் சக்கிரவர்த்தியாய் விளங்கியவர், அந்தச் சிறுவரேயாவார். என்னே! ஹஜ்ரத் அவர்களின் வாக்கு உண்மை.

குறிப்பு:—இங்ஙனம் ஹஜ்ரத் க்வாஜா முஈனுத்தீன் சிஷ்தி (ரஹ்) அவர்கள் புனித ஜீவியத்தில் நடைபெற்ற கராமத்து கஷ்பு, அற்புச் செயல்கள் அநேகம் அநேகமுண்டு. அவைகளை யெல்லாம் இங்கு விவரித்தெழுதினால் இச்சிறு நூல் விரிவடைந்து விடுமென்று அஞ்சி இங்கு எடுத்தெழுதவில்லை. (வல்லாஹு அஃலம்)

(தொடரும்)

இரத்தச் சின்னம்

இது திடுக்கிடும் சம்பவங்கள் நிறைந்த ஒரு துப்பறியும் நாவல்

சிரச்சேதம் செய்யப்படுவதினின்று சீர்கெட்ட குற்றவாளி யொருவன் தற்செயலாகத் தப்பிப் பிழைத்திராவிடில், இரத்தச் சின்னம் என்னும் இரகசியக் குழு இயங்கத் துவங்கி இராது. நீதி பரிபாலனத்தில் பரிதவிக்கத் தக்க முறையில் நிகழ்ந்த இந்த அசம்பா விதத்துக்குச் சில வருடங்களுக்குப் பிறகு இரக்க சிந்தையற்றவ னொருவன் இங்கிலாந்தில் இரகசிய நடவடிக்கைகளில் ஈடுபடலானான். தீர்க்க ஆலோசித்து, திட்டமிட்டுத் திறமையோடும் தீரத் தோடும் செயலாற்றுவதன் மூலம் தனக்கு உதவியாளர்களாக ஏராளமான ஆட்களைச் சேகரித்துக் கொண்டான் அவன். ஒருவருக்கொருவர் பரஸ்பர பழக்கமில்லாமலும் அறிமுக மில்லாமலும் அதியற்புதச் செயல்கள் புரிந்த இந்த இரகசியக் குழுவிற்குத் தலைமை தாங்கிய மர்ம மனிதன் இரத்தச் சின்னம் என்று கையெழுத்திட்டான்.

அவனின் மர்ம இரகசியத்தைக் கண்டு பிடித்தல் மிக ஆச்சரியமானது. விலை ரூ. 1–28

ஹாஜி எம். ஏ. ஷாஹுல் ஹமீது அண்டு ஸன்ஸ்,
கெ. 20, ஹைரோட், திருவல்லிக்கேணி, மதராஸ் 5.

யாஸ்மீன்

தொடர் நாவல்

"ஏ. ஆர். கமால்"

2

யாஸ்மீன் பாதாள சிறையில்

ஹிலாகுகான் ஏற்கனவே கலிபாவின் பெண்பிள்ளைகளை மரியாதையோடு நடத்தி வந்தான். இப்போது யாஸ்மீனைப் பார்த்ததும் அவளுடைய வீரதனத்தைக் கண்டதும் அவளிடம் மேலும் அவன் மதிப்புக் கொண்டான். அவள் தன்னை வெறுத்து போய்விடக் கூடாதே என்று யாஸ்மீனுக்கு அவன் பலபல உறுதி மொழிகளை அளித்தான்.

"யாஸ்மீன்! ஆண்கள் விஷயத்தில் நான் எப்படி நடந்து கொண்டாலும் பெண்கள் விஷயத்தில் மட்டும் பெரும் பண்போடு நடந்து கொள்ளக்கூடியவன். இதற்கு நான் ஒன்றும் அத்தாட்சி தர வேண்டியதில்லை. வேறொருவரும் சான்று கூற வேண்டியதில்லை. பெயருக்கு மட்டும் சிறையென சொல்லி பூர்ண சுதந்திரம் தந்து தனி இடத்தில் நான் வைத்துள்ள உன்னைச் சார்ந்த உத்தமிகளிடம் நீயே நேரடியாகச் சென்று கேட்டால் என் பண்பைப் பாராட்டி அவர்கள் பகர்வார்கள். நீ இங்கேயே இருப்பதாயின் அவர்களையும் உன்னிடமே ஒப்படைக்க சித்தமாக இருக்கிறேன். போர்க்களத்தில் நீ காட்டிய வீரம் என் மனதில் அழியா காவியமாக பதிந்து விட்டது. நான் உன்னை என் மகளாக ஏற்றுக் கொள்ளுகிறேன். நீ என் மீது விசுவாசம் கொண்டு என்னை வளர்ப்பு தந்தையாக பாவித்துக் கொண்டால் போதும். நான் உன்னிடம் வேண்டுவது இது ஒன்றே" உறுதி மொழிகளோடு யாஸ்மீனுக்கு வேண்டுகோளும் விடுத்தான் ஹிலாகுகான்.

ஹிலாகுகானின் வேண்டுகோள் யாஸ்மீனின் மனதை இளகச் செய்தது. அவளுக்கு வேறு போக்கிடமும் இல்லை. அத்துடன் தன்னைக் கொன்றுவிட வேண்டிய பகைவனே தன் அவமரியாதை வார்த்தைகளையும் பொருட்படுத்தாமல் பாசம் கொள்ளும்போது அவன் வேண்டுகோளை எப்படிப் புறக்கணிக்க முடியும்? எனவே

யாஸ்மீனும் அங்கேயே இருப்பதாக ஒப்புக் கொண்டு விட்டாள்.

ஹிலாகுகான் கூறியபடியே யாஸ்மீன் தனக்கே பிறந்த மகள் போல் எண்ணி அவள் மீது அளவில்லா அன்பைச் செலுத்தி வந்தான். யாஸ்மீனும் அவனைத் தந்தையாக மதித்து மரியாதை செலுத்தி வந்தாள். அரசாங்க விஷயத்திலும் ஹிலாகுகான் யாஸ்மீனின் அபிப்பிராயத்தைக் கேட்க தவறியதில்லை.

ஒரு சமயம் ஹிலாகுகானை ஒழித்துக் கட்ட சில அதிகாரிகள் சதி செய்தனர். முன்கூட்டியே இதை அறிந்து கொண்ட யாஸ்மீன், எந்த இரவு அவனைக் கொலை செய்ய வேண்டுமென்று குறிப்பிட்டிருந்தார்களோ அந்த இரவில் ஹிலாகுகானை அவன் அறையில் படுக்காதபடி அவனுக்கு ஏதோ வேறு காரணங்களைக் காட்டி வேறு இடத்தில் படுக்கச் செய்தாள். ஹிலாகுகான் படுக்கும் படுக்கையில் ஒரு 'ஹப்ஷி' (நீக்ரோ)யை படுக்க வைத்தாள் யாஸ்மீன்.

குறிப்பிட்ட நேரத்தில் சதிகாரர்கள் வந்து தாக்கினர். ஒரே நேரத்தில் பத்து பனிரண்டு வாள்கள் ஹிலாகுகானின் படுக்கையைப் பதம் பார்த்தன. படுத்திருந்த ஹபஷியின் உடல் துண்டு துண்டாக சிதறி விட்டது. சயன அறையில் இருள் கவ்வி இருந்த படியால் தம் சூழ்ச்சி பலிக்கவில்லை என்ற உண்மையைச் சதிகாரர்கள் அப்போது உணர முடியவில்லை. திட்டமிட்டபடி வேலை நடந்துவிட்டதாக எல்லோரும் மகிழ்ச்சி கொண்டனர்.

காலையில் எழுந்தவுடன் ஹிலாகுகான் தன் சயன அறைக்குச் சென்றான். தன் படுக்கையில் ஒரு ஹபஷியின் உடல் துண்டு துண்டாக இருப்பதைக் கண்டு அளவில்லா ஆச்சரியம் கொண்டான். நடந்த இரவு யாஸ்மீன் சயன அறையில் படுக்க வேண்டாமென்று கூறிய போலி காரணங்கள் அவனுக்கு ஞாபகம் வந்தது. 'என்னை ஒழித்துக் கட்டத்தான் சூழ்ச்சி நடந்திருக்கிறது. இதை எப்படியோ யாஸ்மீன் அறிந்து கொண்டிருக்கிறாள். அவளுடைய விசுவாசப் பயனாகத்தான் நான் இதுவரை உயிருள்ளவனாக இருக்கிறேன்' என்று யூகித்துக் கொண்டான் ஹிலாகுகான். ஆகவே அவனுக்கு யாஸ்மீன் மீது இருந்த அன்பில் இப்போது இயற்கையாகவே மேலும் பெருகியது. யாஸ்மீனின் கூற்றுப்படி சூழ்ச்சி செய்த அத்தனை பேர்களையும் தூக்கில் போட்டு விட்டான் ஹிலாகுகான். ஆனால் அச்சதியில் சம்மந்தப்பட்ட ஒரே ஒரு ஆள் மட்டும் எங்கோ தலை மறைவாக ஓடி விட்டான்.

இச்சம்பவம் நடந்த சில நாட்களுக்குப் பின் ஹிலாகுகான், உடம்பு சவுக்கியமற்றுப் படுக்கையில் படுத்துக் கொண்டான். அவன் மீண்டும் எழுந்து அரசாட்சி செலுத்துவான் என்ற நம்பிக்கை இல்லை. ஆகையால் தான் மரணமாகுவதற்கு முன்பே தனக்குப் பின் இந்நாட்டை ஆள ஒருவரை நியமிக்க நாட்டங் கொண்டான்.

ஹிலாகுகானுக்குப் பனிரண்டு பிள்ளைகள் இருக்கிறார்கள். ஆனால் எல்லோரும் படிப்பில்லா தற்குறிகளாகவும் அறிவற்ற அற்பர்களாகவும் இருந்தனர். அவர்களில் ஒருவனைக் கூட அரச பாரத்தைச் சுமக்க லாயக்கானவன் என்று ஹிலாகுகான் கருதியது கிடையாது. உண்மையில் யாருக்கும் அத்தகைய திறமை இல்லாமலே இருந்தது. சங்கீஸ் சிம்மாசனத்தின் மீது தன் வாய்சொல் மகள் யாஸ்மீன் உட்கார்ந்து அரசாட்சி செலுத்த வேண்டுமென்பது ஹிலாகுகானின் ஆசை. ஆனால் தாத்தாரி மக்கள் ஒரு ஆரணங்கை தன் அரசியாக ஒரு நாளும் ஏற்றுக்கொள்ள மாட்டார்களே!

முன்னொரு மன்னனுக்கு மகன் யாரும் இல்லாமல் மகள் மட்டும் ஒருவள் இருந்தாள். மன்னனுக்குப் பின் அச்சிம்மாசனத்தில் ஏற அவள் ஒருவளே உரிமை பெற்றவள். அப்படி இருந்தும் ஒரு பெண்ணை மன்னனாக ஏற்றுக்கொள்ள முடியாதென்று இந்த தாத்தாரி மக்கள் புரட்சி செய்து, அம்மன்னனின் தூரத்து உறவில் இருந்த ஆண்மகனையே நாடாள நியமித்தவர்களாச்சே! இப்போது யாதொரு உறவுமில்லாத அதுவும் ஒரு இஸ்லாமிய பெண்மணியைத் தன் அரசியாக ஏற்றுக்கொள்ள முடியுமா இத்தாத்தாரிகளால்? முடியவே முடியாது.

ஹிலாகுகானின் மூத்த மகன் பெயர் கப்லாகான். அவனுக்கு வயது இருபத்தி ஐந்திருக்கும்; கட்டுமஸ்தான உடல் கொண்ட அழகிய வாலிபன்.

'எப்படியாகிலும் கப்லாகானின் கல்யாணம் யாஸ்மீனுடன் ஆகி விட்டால் தன்னுடைய நாட்டங்கள் எல்லாம் நிறைவேறி விடும். தாத்தாரி அநேகமாக நாஸ்திகர்களாக இருக்கின்றனர். ஒரு சிலர், சைன மக்கள் வணங்கும் பொருள்களையும் விக்கிரங்களையும் வணங்கி வரக்கூடியவர்கள். இப்படி இருக்க தன் இனத்திற்கும் தன் நாட்டிற்கும் தன் சமூதாயத்திற்கும், தன் கலாசாரத்திற்கும் தன் மதத்திற்கும் எல்லாவற்றிற்குமே மாறுபட்ட கப்லாகான் போன்ற ஒரு ஆண் மகனை மணாளனாக ஏற்றுக்கொள்ள யாஸ்மீனால் எப்படி முடியும்? ஒரு முறை என்னுடன்பேசுவதே தனக்குக் கவுர

வக் குறைவு என்று கூறி இருக்கிருளே அத்தகைய தன்மானம் கொண்ட தோகை இதைக் கேட்டால் என்ன சொல்லுவாள்? 'நீ தாத்தாரி மதத்தில் சேர்ந்து விடு' என்று யாஸ்மீனை அழைத்தால் அது அவளை அழைப்பதாக இருக்காது; அவள் மரணத்தை அழைப்பதாகும்! கப்லாகானுக்கும் யாஸ்மீனுக்கும் கல்யாணம் நடக்க வேண்டுமானுல் அதற்கு ஒரே ஒரு மார்க்கம்தான் இருக்கிறது. அதாவது கப்லாகான் முஸ்லிமாகி விட வேண்டும்! அதன் பின் வேண்டுமானுல் யாஸ்மீன் அவனுக்கு மனைவியாக ஓரளவு சம்மதிக்கக் கூடும்!

இவ்விதமான எண்ணங்களில் மூழ்கி விட்டிருந்தான் ஹிலாகு கான்.

ஹிலாகுகானைக் கொலை செய்ய சூழ்ச்சி செய்த சதிகாரர்களில் தலைமறைவாக ஓடி விட்டிருந்த ஒருவன் எதிர்பாராதவிதமாக அரண்மனைக்குள் பிரவேசித்தான். அவன் உடலை பெண் ஆடையால் மறைத்துக் கொண்டு முகத்தில் ஒரு முகமூடியும் போட்டுக் கொண்டிருந்தான்.

படுக்கையில் உடம்பு சவுக்கியமற்ற நிலையில் படுத்திருக்கும் ஹிலாகுகானிடம் சென்று தாத்தாரி முறைபடி வணக்கம் செலுத்தினுன். அதன்பின் அரசாங்க முத்திரை இடப்பட்ட கடிதம் ஒன்றையும் ஹிலாகுகானின் சந்நிதானத்தில் சமர்ப்பித்தான். அரசாங்க முத்திரையைக் கண்டதும் ஹிலாகுகான் வியப்பில் வாயைப் பிளந்து "நீ யார்?" என்று அம்முகமூடி மனிதனைக் கேட்டான். முகமூடி மனிதன் முகத்தில் இருந்த திரையை நீக்கிவிட்டு ஹிலாகுகானின் கால்களில் தன் தலையைச் சாய்த்து விட்டான் .

ஹிலாகுகான் அரசாங்க முத்திரை இட்ட கடிதத்தின் வாசகத்தைப் படித்ததும் அவன் கண்கள் கோபக்கனலைக் கக்கின. மீசைகள் துடித்தன. அங்கமெல்லாம் படபடத்தன. கோபத்தால் அவன் முகத்தில் எள்ளும் கொள்ளும் வெடித்தன. தலை பக்கம் வைத்திருந்த வாளை எடுத்து அக்கடிதம் கொண்டு வந்து கொடுத்த முகமூடி மனிதனை ஒரே வீச்சில் இரண்டு துண்டுகளாக்கி விட்டான் ஹிலாகுகான். அவனை ஒரே வீச்சில் இரண்டு துண்டாக்கி விட்டதும் கப்லாகானை உடனே அழைத்து வரும்படி கட்டளை யிட்டான்.

கப்லாகான் இருகைகளும் கட்டிக் கொண்டு ஹிலாகுகான் எதிரில் நின்றிருந்தான். அரசாங்க முத்திரை இடப்பட்ட காகிதத்தைக் கப்லாகானிடம் கொடுத்து, தேச துரோகியாக மாறியதன்

காரணத்தைக் கேட்டான் ஹிலாகுகான். தன் எதிரில் பழைய நண்பன் சதியில் சம்மந்தப்பட்டவன் இரு துண்டுகளாகி கீழே கிடப்பதைப் பார்த்து, தன் சூழ்ச்சியின் குட்டு ரகசியமாக இருந்தது அம்பலமாகி விட்டது என அறிந்த அவன் பெரும் திகில் அடைந்தான். தன் உயிர் மேலும் நிற்கும் என்ற நம்பிக்கை போய் விட்டிருந்தது. குற்றத்தை ஒப்புக் கொள்வதைவிட வேறு வழி இல்லாமல் இருந்தது.

"பாழும் மண் இச்சையால் நினைத்த மாத்திரத்தில் மன்னனாக வேண்டுமென்ற அற்ப ஆசையால் பாலும் பழமும் பாசமும் ஊட்டி வளர்த்த பிதாவாகிய தங்களைக் கொல்ல வேண்டுமென்று சூழ்ச்சி செய்ததே நான்தான். என்கிலும் தாங்கள் அச்சூழ்ச்சிக்கு ஆளாகாமல் இருந்தது என் பாக்கியம் என்றே கருதுகிறேன். அத்தீய எண்ணம் என் மனதில் அப்போது எப்படி ஏற்பட்டது என்பதே தெரியவில்லை. என் தவறை நான் பூர்ணமாக இப்போது உணர்ந்து அதற்காக உண்மையிலேயே நான் பெரிதும் வருந்துகிறேன். 'சிறியோர் செய்த பிழைகள் யாவும் பெரியோர்கள் பொறுப்பது கடனே' என்ற சத்தியவாக்கை முன்னிட்டு தாங்கள் தயவு செய்து என் குற்றத்தை மன்னித்து என்னை ரட்சிக்கும்படி மிகவும் தாழ்மையோடு வேண்டிக் கொள்கிறேன்" என்று கூறியபடி கப்லாகான் தடால் என்று ஹிலாகுகானின் காலில் விழுந்தான். இவ்வளவு வணக்கத்துடன் வேண்டியும் ஹிலாகுகான் மனம் இளகவில்லை. என்றாலும் கப்லாகானைக் கொல்லாமல் பாதாள சிறையில் அடைத்து விட்டான்.

ஹிலாகுகான் ஏற்கனவே உடல் நலமற்று இருந்தான். அதிலும் வயது அதிகமாகி விட்டதால் ரொம்பவும் பலஹீனமாக இருந்தான். அரசாங்க வைத்தியர் எவ்வளவுக் கெவ்வளவு நல்ல மருந்துகளைக் கொடுத்துச் சீக்கிரம் சொஸ்தமாக்க முயற்சிக்கிறார்களோ வியாதி அவ்வளவுக்கவ்வளவு அதிகமாகிக் கொண்டே வந்தது மீண்டும் எழுந்து சங்கீஸின் சிம்மாசனத்தில் உட்காருவான் என்ற நம்பிக்கை அற்றிருந்த அக்கோரத்தில், தன் மகனே தன் உயிருக்கு எமனாக சில நாட்களுக்கு முன் மாறிவிட்ட சேதி அறிந்து பெரும் கவலை கொண்டான். எந்த மகனுக்கு யாஸ்மீன் மனைவியாக வேண்டுமென்று எண்ணுததை எல்லாம் எண்ணி ஏங்கிக் கொண்டிருந்தானோ அதே மகன் தன்னை ஒழிக்க சூழ்ச்சி செய்வான் என ஹிலாகுகான் கனவிலும் கருதவில்லை ஆகையால் மகனின் சதி அம்பலமானதும் ஹிலாகுகானுக்கு ரத்தக் கொதிப்பால் இருதய துடிப்பு ஏற்பட்டது. இரண்டு மணி நேரத்திற்குள் அதே இருதய துடிப்பால் (ஹார்ட்பைல்) ஹிலாகுகான் இவ்வுலகை நீத்தான்.

வெறும் இரண்டு மணி நேரம் மட்டும் பாதாள சிறையில் இருந்த கப்லாகான், ஹிலாகுகான் மரணமானதும், விடுதலையாகி விட்டான். இப்போது அவன் குற்றவாளி அல்ல. சங்கிஸ் சிம்மாசனத்தை அலங்கரிக்கும் அரசன்! அவன் பாதாள சிறையில் இருந்து வெளி வந்தவுடன் முதல் வேலையாக யாஸ்மீனைப் பாதாள சிறையில் அடைத்தான்.

கப்லாகான், தன் தந்தையைக் கொல்ல செய்த சூழ்ச்சி வெற்றி பெறுமல் போனதற்கும், தலை மறைவாக ஓடி விட்டிருந்த மஹ்மூத் என்னும் தன் கூட்டாளி மீண்டும் ஹிலாகுகான் எதிரில் வந்து அரசாங்க முத்திரை பதித்து தன்னுல் கொடுக்கப்பட்ட கடிதத்தை அவரிடம் கொடுத்து தன்னைத் தண்டிக்கும் பொருட்டு பாதாள சிறையில் அடைக்கப்பட்டது யாவற்றிற்கும் யாஸ்மீனே காரணம் என திடமாக நம்பியே அவளைப் பாதாள சிறையில் அடைத்து விட்டான்.

கப்லாகான் முதல் தடவையாக யாஸ்மீனைக் கண்டதும் அவள் மீது தீரா காதல் கொண்டு விட்டான். ஆனுல் யாஸ்மீன் அதைப் பொருட்படுத்தவில்லை. கப்லாகானின் தேனெழுகும் காதல் பேச்சு யாஸ்மீனுக்கு இனிக்கவில்லை. அதற்கு மாருக அது கசக்க செய்தது. அவள் வீரமிக்க வனிதை. ஆண்களின் விவேகத் தன்மை கொண்டவள். அபலைகளைப் போல் அழுவதும் துயரம் கொள்வதும் போலி சத்தியங்கள் இடுவதும் அவளுக்குப் பிடிக்காதவைகள். ஆகவே கப்லாகானின் காதலை அவள் எட்டி உதைத்தாள். மேலும் நாஸ்திகன் மட்டுமின்றி நயவஞ்சகமாக நாசமாக நாசவேலைகளில் ஈடுபடும் கப்லாகான் போன்ற கயவனைத் தன் கணவனுக ஏற்றுக் கொள்ள அவள் தூய இஸ்லாமிய உள்ளம் இடங் கொடுக்கவில்லை. ஆனுல் சமயம் ஏற்படும் போதெல்லாம் கப்லாகான் யாஸ்மீன் இடம் தன் காதல் பல்லவியைப் பாட தயங்கியதுமில்லை தவறியதுமில்லை. கப்லாகான் யாஸ்மீனைக் காதலிக்கும் விஷயம் ஹிலாகுகானுக்கும் தெரிந்தது. அதை முன்னிட்டுத்தான் இருவருக்கும் கல்யாணம் செய்ய அவன் எண்ணினுன். ஆனுல் இருவருக்கிடையே மதம், கலாசாரம், சமூதாயம் யாவும் ஒருங்கே ஒரு இரும்பு திரையாகி நின்று விட்டிருந்தன. இவை எல்லாம் உடைத்தெறிந்து விட்டு பலாத்காரமாக யாஸ்மீனை கப்லாகானுக்கு மனைவியாக்க ஹிலாகு கான் விரும்பவில்லை.

கப்லாகான் சூழ்ச்சி செய்வதில் தனக்கு நிகர் தானுகவே இருந்தான். தன் தந்தை ஹிலாகுகானை ஒழித்து விட்டு உடனே அரசனுக நாட்டங் கொண்டு ராணுவ அதிகாரிகள் சிலரைத் தான் செய்யும் சதியில் சேர்த்துக் கொண்டு அவர்கள் உதவியால் எளிதில்

ஹிலாகுகானை ஒழிக்கும் முயற்சியை மேற்கொண்டான். கப்லா கானின் துரதிருஷ்டமோ அல்லது ஹிலாகுகான் இன்னும் சில நாட்கள் உயிருடன் இருக்க வேண்டுமென்ற இயற்கையின் கனிவோ! இதற்கிடையே யாஸ்மீனுடன் பேசிக் கொண்டிருக்கும் போது காதல் வேகத்திலே தன் சூழ்ச்சியின் ரகசியத்தை அவளுக்குச் சொல்லி விட்டான். இக்காட்டு மஹாராணியாகும் மகிழ்ச்சியிலே யாஸ்மீன் தன்னை மணக்து கொள்ள சம்மதம் அளித்து விடுவாள் என்று எதிர்பார்த்தான் கப்லாகான். ஆனால் யாஸ்மீன் அவன் சூழ்ச்சி செய்து அரசனைக் கொலை செய்யும் விஷயத்தைக் கேட்டு கோபமே உருவாகி கனல்கக்கக் கத்தினுள்.

“உனக்கு உன் உயிர் மீது ஆசையிருந்தால் இச்சதியில் இருந்து உடனே நீங்கி விடு! ஆனல் நீ நீங்கிவிட்ட விஷயம் உன் கூட்டாளி யாருக்கும் தெரிவிக்கக் கூடாது. இல்லாவிட்டால் எல்லா விஷயமும் அரசர் ஹிலாகுகானுக்கு சொல்லி விடுவேன்” இவ்விதமாக யாஸ்மீன் சொன்னதும் தன் உயிருக்கு அஞ்சி வேறு வழி இல்லாமல் கப்லாகான் சதி செய்யும் வேலையில் சம்மதப்படாமல் ஒதுங்கிக் கொண்டான். இதன் காரணமாக சதியில் ஈடுபட்டவர்களை எல்லாம், ஓடி விட்டவன் ஒருவனைத் தவிர, தூக்கில் போட்டு விட்டனர். யாஸ்மீன் தன் வாக்குபடி கப்லாகானுக்கு யாதொரு ஆபத்தும் ஏற்படாதவாறு காப்பாற்றி தன் இஸ்லாமிய தனத்தை நிருபித்து இருந்தாள். ஆகவே, கப்லாகானின் கோபமும் ஓரளவு குறைந்து விட்டிருந்தது.

இதற்குள் ஓடிப்போன மஹ்மூத் என்னும் கூட்டாளி பிரசன்னமாகி, ஹிலாகுகானை கொல்லும் சதியில் ஈடுபட்டால் தன்னை மந்திரியாக ஆக்கிக் கொள்வதாக, கப்லாகான் எழுதிய கடிதத்தை ஹிலாகுகானிடம் சமர்ப்பித்து இரண்டு துண்டாகி விட்டான். இச்சம்பவம் எல்லாம் யாஸ்மீனுல் ஏற்பட்டது என்று கப்லாகான் எண்ணினுன். அசைக்க முடியா அதே எண்ணத்தின் காரணமாகத் தான் அவளைப் பாதாள சிறையில் அடைத்து விட்டான். “யாஸ்மீன் பாதாள சிறையில்” யாதொரு மனக்கலக்கமும் இல்லாமல் ஆண்டவன் விட்ட வழி என நிம்மதியாகவே இருந்து வந்தாள்.

(தொடரும்)

தந்தாய்!

(வேளாங்கண்ணி கவிஞர் சாந்திதாசன்)

விண்ணையும்—விரிகதிரும் சிருஷ்டித்தாய்
வளமுறும் குறுநிலமும்—மலையும் வைத்தாய்
பொன்னேடு—பொருளையும் புனலும் ஈந்தாய்
பொறுமையாய் உய்ய மாந்தர்களை நிறைத்தாய்! 1

கண்ணையும்—கருத்தையும் காண வைத்தாய்
கடமையை உடமையாய்ப் பூணச் செய்தாய்
என்னையும் எங்கெங்கோத் திரியவிட்டாய்
ஏகாந்தமாய் எதிலும் நிறைந்து பட்டாய்! 2

உணவோடு—உணர்வையும் ஊட்டிவைத்தாய்
உத்தமரை விருந்தோம்பி அழைக்கச் செய்தாய்
கனவையும்—நினைவையும் கலந்து விட்டாய்
காலத்தைக் கனவேக மூட்டிவைத்தாய்! 3

அறிவையும்—உரிமையும் ஆக்கிவைத்தாய்
அதிகாரப் பதவியும் தூக்கி வைத்தாய்
நெறியையும்—நேர்மையும் நிலைக்க விட்டாய்
நேசமும்—பாசமும் பேசவைத்தாய்! 4

விதியையும்—நிதியையும் வகுத்தளித்தாய்
வீணரின் மானமும் காத்துநின்றாய்
மதியுடன் தாரகை பலஅமைத்தாய்
மங்காதச் சுடரொளிப் பரவச்செய்தாய்! 5

பசுந்தளிர்ச் சோலையில் மலரை வைத்தாய்
பாழ்கடல் சிப்பிக்குள் முத்தை வைத்தாய்
அசுரவேக அரவத்துள் மாணிக்கம் வைத்தாய்
அத்தனையும் உன்புகழைப் பாடச் செய்தாய்! 6

தற்குறி நெஞ்சிலும் உன்னை வைத்தாய்
தள்ளாமை நோத்தில் எண்ணவைத்தாய்
நற்செயலால் நன்மைப் பரிசுவைத்தாய்
நீ யன்றி எதுமில்லை யெனஉரைத்தாய்! 7

சீறும் புயல் தென்றலோடு மழையும் தந்தாய்
சிதர்கின்ற அதிர்வெடியும் மின்னல் வைத்தாய்
ஒருகுலமும்—ஒருஇனமும் நாங்களென்றாய்
ஒளிர்கின்ற பிறைக் கொடியின் சின்னம் தந்தாய்! 8

முஸ்லிம் மன்னர்களின் உபசார குணம்

டி. எப். ஆர். மஆலி சாஹிப் (பாகவி)

முன்னுரை

(பண்டைக்கால முஸ்லிம்களுடைய ஆட்சி காலத்தில் எத்தனையோ அற்புதமான சம்பவங்கள் நடைபெற்றுள்ளன. அவைகளெல்லாம் சரித்திர ஏடுகளில் பாதுகாத்து வைக்கப் படாமல் போனதால், முஸ்லிம்களுடைய உள்ளங்களிலிருந்து மறைந்து போய்க் கொண்டிருக்கின்றன.

இஸ்லாத்தின் நான்கு கலீபாக்களான குலபாயே ராஷிதீன் களுடைய நேர்மையான இஸ்லாமிய குடியரசாட்சிக்குப் பின், முஸ்லிம் சமுதாயத்தின் விதி வாழ்வில் பல சோதனைகளும் சிக்கல் களும் ஏற்பட்டன. அத்தகைய குழப்பமான நிலைமையில் பனி உமய்யாக்களுடைய அரசாக்ஷி முறை ஏற்பட்டுக் கொஞ்ச காலம் இஸ்லாமிய சுல்தான்களின் பெயரால் ஆட்சி முறை நடைபெற்று வந்தது. அதனைத் தொடர்ந்து பிறகு பனி அப்பாஸியாக்களின் ஆட்சி முறை நடைபெற்றுக் கொண்டிருந்தது.

பனி அப்பாஸியா காலத்தில், முன்னைய பிரமுகர்களும் பிரதானிகளும் நாடு இழந்து நகர் இழந்து சுகம் இழந்து துன்பகர மான சோதனை வாழ்வு நடத்தி வந்தனர். அப்படிப் பட்டவர்களில் இப்ராஹீம் பின் சுலைமான் என்பவரும் ஒருவர். இவரது வாழ்க்கைச் சம்பவமே, இம்மாதச் சிறுவர் பகுதிக்குரிய கதை வரலாறு :—)

கதை வரலாறு

பனி உமய்யாக்களுடைய ஆட்சி முறை முடிவடைந்து போன பிறகு, பனி அப்பாஸியாக்களுடைய ஆட்சி முறை ஏற்பட்டு அரசியல் நடைபெற்று வந்தது.

பனி அப்பாஸியாக்களில் முதல் முதல் தோன்றிய கலீபாவாகிய ஸப்பாஹ் என்பவர் நல்லவராக விளங்கினார். பெரும் போராட்டங்

களுக்கும் பல கொலைகளுக்கும் பல நாசங்களுக்கும் பிறகே இவரது கிலாபத்து நிலைபெற்ற தென்றாலும், இவர், தமக்கு எதிரிடையாக செயல் புரிந்தவர்களில் பெரும்பாலோரை மன்னித்து, நல்ல பெயர் வாங்கினர். எனவே, ஓர் பகிரங்க அறிக்கை வெளியிட்டார் அதாவது :—

"யார் யார் தங்கள் இன் உயிரைக் காப்பாற்றிக் கொள்வதற்காக வீடு வாசலையும், மனைவி மக்களையும், நாடு நகரத்தையும் விட்டு ஓடிப்போய், தலை மறைந்து கொண்டிருக்கிறார்களோ, அவர்களெல்லாரும் திரும்பி அவரவர் ஸ்தானத்துக்கு வந்து சேர்ந்து விடலாம். புதிய அரசாங்கம் பழைய அரசாங்கத்தைச் சேர்ந்த எதிர்ப்பாளர் எவரிடமும் பழிக்குப்பழி வாங்காது; யாரையும் தண்டிக்காது; எல்லோருக்கும் பொது மன்னிப்பு அளிக்கப் பட்டுள்ளது" என்பதாகும்.

அப்பாஸியாக்களுடைய புது அரசாங்கம் ஏற்படுவதற்காக புரட்சி நடை பெற்றபோதே அதில் பங்கெடுத்துக் கொண்ட, ஈடுபட்ட பிரமுகர்களில் இப்ராஹிம் பின் சுலைமான் என்பவர் ஒருவராவார். இவர், புதிய கலீபாவின் ஆட்கள் பிடித்து தண்டித்துக் கொன்று விடுவார்கள் என்று பயந்து, உயிரைக் காப்பாற்றிக் கொள்வான் வேண்டி ஊரை விட்டு ஓடிப்போய், முக அடையாளத்தை திரையிட்டு மறைத்துக் கொண்டு மாறு உடையில் எங்கெங்கோ அலைந்து கொண்டிருந்தார். இருக்க இடமின்றி, உண்ண உணவின்றி, மனம் போன போக்கில் இடம் கிடைத்த இடத்தில் தங்கி காலம் போக்கி வந்தார்.

அப்போது இவருக்கு மனமாற்றம் ஏற்பட்டு உள்ளத்தில் ஓர் எண்ணம் உதயமாயிற்று. அதாவது "நாம் ஏன் மனிதர்களுக்குப் பயந்து உயிர் வாழ வேண்டும்? இந்தக் கோழை வாழ்வைவிட வீரத் தியாக வாழ்வே சிறந்தது. எனவே பகிரங்கமாக புதிய கலீபா இடம், நேரில் போய் நான்தான் இப்ராஹீம்; என்னை என்ன வேண்டுமானாலும் செய்யுங்கள்" என்று சொல்லிக் கொள்வோம். இந்தத் துன்பகரமான சூழ்நிலை எப்படியாவது ஒழியட்டும் என்றும் எதிர் பார்த்தார்.

இவ்வாறே இப்ராஹிம் பின் சுலைமான் நேரிடையாகவே, கலீபா ஸப்பாஹ் உடைய சமுகத்தில் போய், தான் இன்னார் என் பதைத் தெரியப் படுத்திக் கொண்டார்.

கலீபா ஸப்பாஹ், பகிரங்க அறிக்கை வெளியிட்டிருந்ததற் கொப்ப, இப்ராஹீம் விஷயத்தில் தயாளராகவும் நல்லவராகவும் நடந்து கொண்டார். அவரை மன்னித்து விட்டதுமல்லாமல்

தன்னுடைய அரண்மனையிலேயே ஒரு சொந்த விருந்ினராக ஏற்றுக் கொண்டு, நல்லுணவும் நல்லாதரவும் அளித்து உபசரித்தார்.

அப்படி இரண்டொருநாள் உபசரித்து ஒரு சமயம், சாவகாசமாக உட்கார்ந்து பேசிக் கொண்டிருக்கையில், "நண்பரே, தாங்கள் இத்தனை நாள் தலைமறைந்து எங்கெங்கோ திரிந்து கொண்டிருந்தீர்; எத்தனையோ இடங்களையும் சம்பவங்களையும் அனுபவங்களையும் கண்டிருப்பீர். அப்படிப்பட்ட அனுபவங்களில், உங்கள் மனதைக் கவர்ந்த உருக்கமான சம்பவமொன்றை எனக்கு எடுத்துச் சொல்லுங்கள்" என்று கோரிக் கொண்டார். அதற்கிணங்கி, இப்ராஹிம் பின் சுலைமான் எடுத்துரைத்த ஓர் உருக்கமான வரலாறு பின் வருமாறு :—

உருக்கமான வரலாறு

"நான், போராட்டத்திலிருந்து தப்பித்து என் உயிரைக் காப்பாற்றிக் கொள்ளும் எண்ணத்தோடு, கூபா நாட்டுக்குப் போய்ச் சேர்ந்தேன். கூபா நகரத்தில் முற்றும் நான் ஓர் அன்னியனாக இருந்ததால், அங்கு எனக்கு அறிமுகமானவர் ஒருவரும் கிடையாது. எனவே, அங்கு எனக்கு உண்ண உணவோ, இருக்க இடமோ சரிவரக் கிடைக்கவில்லை. ஒரு முஸாபிரைப் போலும், ஒரு பிரயாணியைப் போலும், ஒரு துறவியைப் போலும் நாட்களைக் கடத்தி வந்தேன். எனவே, சொல்லொணாத் துன்பங்களுக்கும், சகிக்கொணாத் தொல்லைகளுக்கும் இலக்காகி வந்தேன்.

அப்படி யிருக்கையில் ஒருநாள் எனக்கு மிகவும் கஷ்டம் ஏற்பட்டது, பசியும் அதிகமாக இருந்தது. அலைந்து அலைந்து கால்களும் ஓய்ந்து, உடலும் சோர்ந்து விட்டது. அப்போது என் கண்முன் ஒரு பெரிய மாளிகை காணப்பட்டது. ஆடம்பரமான அந்த வீட்டை நோக்கிச் சென்றேன். வாசல் அருகில் நின்று, உள்ளே போகலாமா? என்று யோசிக்கலானேன். இரவு நேரமாய் இருந்ததால், சந்தடி இல்லாமல் நிம்மதியாக இருந்தது. சிறிது நேரம்தான் நான் நின்று இருப்பேன் அப்போது, வெளியிலிருந்து விளக்கு வெளிச்சத்துடன் சிலபேர்கள் வந்து அந்த மாளிகைக்குள் பிரவேசித்தார்கள். இவர்களுக்கு முன்னால் அவர்களுக்குத் தலைவரும் பிரமுகருமாக ஒரு அழகிய வாலிபர், அலங்கார உடைகளுடன் கம்பீரமாக போய்க் கொண்டிருந்தார். அவர்தான் இந்த மாளிகைக்கு சொந்தக்காரராகவும், இந்த ஜனங்களுக்கு எஜமானராகவும் இருக்க வேண்டுமென்று யூகித்துக் கொண்டேன்.

உள்ளே சென்ற வாலிபப் பிரமுகர், தமக்குரிய சிம்மாசனம் போன்ற மேடையில், உயர் ஆசனத்தில் அமர்ந்து கொண்டார்.

அப்போது நானும் தைரியமாக உள்ளே பிரவேசித்து, அவ்வாலிப ருக்கு ஸலாமும் மரியாதையும் செய்தேன். அவர் பரிவுடன் என்னை நோக்கி, "தாங்கள் யார்? என்ன வேண்டும்?" என்று கேட் டார்.

அதற்கு நான் "பிரமுகரே, அன்பரே, நான் ஒரு வழிப் பிரயாணி; முஸாபிர், இவ்வூருக்கு அன்னியன். இங்கு என்னை அறிந்தவர் யாருமில்லை; என்னை யாரும் உபசரித்து உணவளிப் பாரும் இல்லை. எனவே நான், இன்றிரவை தங்கள் விருந்தினராக இருந்து கழிக்கலாமென்று வந்துள்ளேன். தாங்கள் தயவு செய்து என்னை ஏற்றுக் கொள்ளுங்கள்" என்று கோரிக் கொண் டேன்.

இதைக் கேட்டு அந்த வாலிபப் பிரமுகர் என்னை அருகில் அழைத்து ஆதரித்து பக்கத்தில் இருந்த ஒரு சயன அறையில் என்னைத் தங்கி யிருக்கும்படி அனுமதி யளித்தார்.

அங்கு விலையுயர்ந்த இரத்தினக் கம்பளம் விரிக்கப் பட்டிருந் தது; மெல்லென அமைந்த கட்டில் வைக்கப் பட்டிருந்தது. மற்றும் எல்லா விதமான சௌகர்யங்களும் இருந்தன. நான் அங்கு போய், கை கால்களைச் சுத்தம் செய்து கொண்டு ஆசனத்தில் அமர்ந்து கொண்டேன்.

கொஞ்ச நேரத்தில் பணிவிடைக் காரர்கள், எனக்கு நல்ல உணவுகளைக் கொண்டு வந்து பரிமாறி உண்ணும்படி உபசாரம் செய்தனர். நல்லுணவை உண்டு திருப்தி யடைந்தேன். பிறகு 'அல்ஹம்து லில்லாஹ்' என்று சொல்லி, எல்லாம் வல்ல இறை வனுக்கு நன்றியறிதலை தெரிவித்துக் கொண்டேன்.

இவ்வாறே நான் அங்கு ஒன்றிரண்டு அல்ல; பலநாள் தங்கினேன். அத்தனை நாளும் அவ்வீட்டு எஜமான் என்னை மனங் கோணாமல் நல்ல விதமாய் உபசரித்துக் கொண்டே இருந்தார். "வந்து பலநாள் ஆகிறதே, போகவில்லையா?" என்று யாருமே சொல்லவில்லை. இதனால், விருந்தினர்கள் எத்தனை நாள் இருந் தாலும், வீட்டு எஜமானர், மன உவப்புடன் உபசரிக்கும் பெருந் தகையாளர் என்று தெரிந்து கொண்டேன்.

வீட்டுக்குரிய எஜமானரான வாலிபர், ஓர் விசித்திரமானவராக இருந்து வந்தார். அதாவது, தினமும் காலையில் உணவருந்தி விட்டு, குதிரை மேலேறிக் கொண்டு வெளியில் போய் விடுவார். வெகு நேரத்துக்குப் பிறகு, பிற்பகல் நேரத்தில்—மாலை நேரத்தில், மிகவும் சோர்ந்து விசாரத்தோடு மனதில் மகிழ்ச்சி யில்லாமல் திரும்பி வருவார். இப்படி இருப்பினும் தினமும் ஒரு முறை என்னை வந்து பார்த்துப் பேசி உபசரித்து விட்டுப் போவார்.

ஒரு நாள் அவர் என் அருகில் வந்து உட்கார்ந்து கொண்டு அன்னியோன்னியமாக சம்பாஷிக்கலானார். என்னுடைய க்ஷேம லாபமாகிய கைர்—ஆபியத்தைப் பற்றி சிரத்தையுடன் விசாரித்தார்.

அப்போது நான் அவரை நோக்கி ஒரு கேள்வி கேட்டேன். அதாவது :— "பிரமுகரே, தாங்கள் இவ்வளவு உபசார குணமும் கருணை உள்ளமும், நல்ல சுபாவமும் உடையவராக இருக்கிறீரே; ஆனால் தீராத கவலையும் ஏதோ மனக் குழப்பமான விசாரமும் உடையவராக இருக்கின்றீர்களே ஏன்? தினமும் காலையில் போய், அலைந்து தேடி ஏமாற்றத்துடன் திரும்பி வருகின்றீர்களே, என்ன காரணம்? என்ன விருத்தாந்தம்?" என்று கேட்டேன்.

இதைக் கேட்டு அவர் ஏக்கத்துடன் ஒரு பெருமூச்சு விட்டுச் சொன்னதாவது :- "கொஞ்ச காலத்துக்கு முன் அரசாங்கப் புரட்சி நடந்ததல்லவா? அப்போது என்னுடைய அருமைத் தகப்பனாரை இப்ராஹீம் பின் சுலைமான் என்ற பேர்வழி குத்திக் கொலை செய்து விட்டு, ஓடிப்போய் எங்கோ தலை மறைந்துக் கொண்டனன். எப்படியாவது, எங்கேயாவது அவனைக் கண்டு பிடித்து, பழிக்குப் பழி வாங்கித் தீர்க்க வேண்டு மென்றே தினமும் அலைந்து திரிந்து கொண்டிருக்கிறேன். இதுவரை எனக்கு அந்தக் கொலைப் பாதகன் கிடைக்கவில்லை. இது ஒன்றுதான் எனக்குள்ள தீராத விசாரம். மற்றபடியெல்லாம் நான் சுக சௌக்கியமாகவே இருக்கின்றேன்" என்று பதில் சொன்னார்.

அவர் வாயிலிருந்து 'இப்ராஹிம் பின் சுலைமான்' என்ற என்னுடைய பெயரைக் கேட்டதும் நான் திடுக்கிட்டுப் போனேன். ஆம். அக்காலத்தில், அரசியல் போராட்டத்தின் போது, சூழ்நிலையும் சந்தர்ப்பமும் சேர்ந்து இருந்ததால், அவ் வாலிபருடைய தகப்பனாரைக் கொல்ல வேண்டி ஏற்பட்டுவிட்டது.

இப்போது, அந்த வாலிபருடைய அத்தியந்த விருந்தினராகயிருக்கும் நான், அவருடைய உணவை உண்டு கொண்டிருக்கும் நான் அவருக்கு எப்படி துரோகம் செய்வது? அவர் தினமும் என்னைத்தான் தேடிச் சென்று அலைந்து திரும்பி வருகின்றார். துரோகியாகிய நான், பெயர் மறைவாய், முகம் மறைவாக அவர் வீட்டிலேயே இருந்து அவருடைய உணவையே தின்று கொண்டிருக்கிறேன். இந்தக் கொலை குற்றத்துக்குத் தண்டனை கிடைக்குமென்று பயந்தே தலை மறைந்து ஊர் ஊராய்த் திரிந்து கொண்டிருக்கிறேன். இந்த தர்ம சங்கடத்துக்கு என்ன செய்வது? இப்படிப்பட்ட, நிம்மதி யில்லாத அவல வாழ்க்கை வாழ்ந்து உயிரைக் காப்பாற்றிக் கொண்டிருப்பதில் என்ன பிரயோஜனம்? நான் மனம் சடைந்து போய் இருந்தேன். மரணத்துக்கும் ஜீவி

யத்துக்கு மிடையில் என் மனசாக்ஷி போராடிக் கொண்டிருந்தது. எனவே இறுதியாக நான் என் மனதில் திடமான ஒரு முடிவுக்கு வந்து சேர்ந்தேன். அதாவது, 'நம்மை நாமே, இப் புனித வாலிபரிடம் ஒப்படைத்துக் கொண்டால் என்ன? தன் தந்தையின் படுகொலைக்குப் பரிகாரமாக அவர் என்னுடைய உயிரை வாங்கிக் கொள்ளட்டுமே, இதனால் எனக்கும் நிம்மதி, அவருக்கும் மனம் சாந்தி..."

இவ்வாறு நான் ஒரு முடிவுக்கு வந்து அவரை நோக்கி "அன்பரே, அகதிகளை ஆதரிக்கும் அருங்குணம் உடையவரே, நான் உம்முடைய தகப்பனுரைக் கொன்ற கொலைப் பாதகனைக் காண்பித்துக் கொடுத்தால் தாங்கள் சந்தோஷம் அடைவீர்கள் அல்லவா?" என்று கேட்டேன்.

அதைக் கேட்டு அவரது முகத்தில் மகிழ்ச்சிக் குறி காணப் பட்டது. என்னைப் பேரார்வத்துடன் நோக்கி, மனம் உற்சாகம் அடைந்தவராக, என் கரங்களைப் பற்றிக் கொண்டு "சொல்லுங்கள்; என் அருமைத் தகப்பனுரைக் கொன்ற கொலைப் பாதகனின் தகவலைச் சொல்லுங்கள். இதற்கு ஈடாக நான் தங்களுக்கு என்னு லான சகல சாதனங்களையும் கொடுப்பேன். எனக்கு ஒரு அரசாங் கமே கிடைத்து விட்டதுபோல் சந்தோஷப் படுவேன். மேலும் தங்களுக்கு என்றென்றும் நன்றியறித லுடையவனுகவும் கடமைப் பட்டவனுகவும் இருப்பேன்" என்று பரிவுடன் விண்ணப்பித்துக் கொண்டார்.

இதைக் கேட்டு மனமாற்றம் அடைந்த யான், அவருக்கு என்னையே தியாகம் செய்து விடுவதென்று தீர்மானித்து விட்டேன். எனவே அவரை நோக்கி "அன்பரே, நான் ஒரு அன்னியன் என்றும், ஏழை என்றும் தாங்கள் என்னை ஆதரித்து உணவளித்து உபசரித்து வருகின்றீர். தங்களுக்கு நான் துரோகம் செய்யக் கூடாது. இதோ பாருங்கள். தாங்கள் தினமும் தேடித் திரியும் பேர்வழி நான்தான் தங்கள் தகப்பனுரை, சூழ்நிலை காரணமாக கொன்று விட்டு, தலை மறைந்து திரிபவன் நான்தான்" என்று சொல்லி என் முகத்திரையைக் களைந்து காட்டினேன்.

என் முகத்தைக் கண்டு முதலில் அவர் திடுக்கிட்டார். எனினும் ஆத்திரம் கொள்ளவில்லை; கோபம் காட்டவில்லை. ஒரு நிமிஷம் ஒன்றுமே புரியாமல், மெய்மறந்து உள்ளம் குழைந்து விட்டார் பிறகு வாய் திறந்து "அன்பரே தங்களுடைய குணத் தையும் மனமாற்றத்தையும் உண்மை யுரையையும் கொண்டு, தாங்கள் தான் இப்ராஹிம் பின் சுலைமான் என்பதை ஒப்புக் கொள்ளுகிறேன். தங்கள் அடையாளத்தையும் நான் கண்டு பிடித்துக் கொண்டேன்.

ஆனல், பழிக்குப் பழியாக நான் தங்களை எங்ஙனம் கொல்ல முடியும்? என் தகப்பனரைக் கொன்ற காரணம் எனக்குத் தெரியாது. ஆனல், பழிக்குப்பழி வாங்க வேண்டும் என்று நான் ஏற்றுக் கொண்டுள்ள சங்கல்பத்தை நான் எப்படி நிறைவேற்றுவேன்? இப் பிரச்னையை நான் எப்படித் தீர்க்க முடியும்?" என்று விசாரப் பட்டுக் கூறினர்.

அதற்கு நான், அவர் கையைப் பிடித்துக் கொண்டு, "நான் என் உடலையும் உயிரையும் தங்களிடம் ஒப்படைத்து விட்டேன். தங்கள் தகப்பனரைக் கொன்ற பாவியாகிய என்னை, தங்களது கரத்தால் வெட்டிக் கொன்று தங்கள் இரத்த தாகத்தைத் தணித்துக் கொள்ளுங்கள். அப்போதுதான் எனக்கும் மன நிம்மதி ஏற் படும்" என்று வேண்டிக் கொண்டேன்.

இதைக்கேட்ட அந்த நல்ல வாலிபர், கண்களில் நீர் உகுத்து "அந்தோ, என்னுடைய பிரயாசை யெல்லாம் வீணகிப் போய் விட்டதே; தங்களை நான் எப்படிக் கொல்ல முடியும்? இப்போது தாங்கள் என்னுடைய அகதியாகவும், விருந்தினராகவும் இருக் கின்றீர். என்னுடைய பாதுகாப்பில் இருப்பவரை நான் கொல்வது நேர்மையல்ல, தர்மம் அல்ல, ஒழுக்கமும் அல்ல. இது எங்கள் அரபி குல விருந்தோம்பல் பண்புக்கு மாறு பட்டதாகும். அன்பரே என்மீது தங்களுக்கு அனுதாபம் இருக்குமாயின், உடனே என் எதிரிலிருந்து எழுந்து சென்று, எங்கேனும் போய் விடுங்கள். தயவு செய்து எனக்குக் கோபம் வருவதற்குமுன், என்னுடைய சாந்த குணம் மாறி விடுவதற்குமுன் எழுந்து போய் விடுங்கள்" என்று வேண்டிக் கொண்டு, ஒரு பை நிறைய தங்க நாணயங்களை (அஷ்ரபிகளை) கொடுத்து, என்னை வெளியேற்றி விட்டார்.

நான் அவருக்கு ஆசி புரிந்து துஆ செய்து விட்டு வெளி வந்தேன். இதுதான் நான் கண்ட அற்புதச் சம்பவம்; என்னுடைய வாழ்வின் அதிசயம்".

பத்ஹுர் ரஹ்மான்
பில்பிக்ஹின் னு:மான்

(ஹனபி மதுஹபுக்குரியது)

பிரயோஜனமான கல்வி, பிரயோஜன மில்லாத கல்வி என்று இரண்டு வகையுண்டு. உலக வாழ்வை மட்டும் நமக்கு எடுத்துச் சொல்வது பிரயோஜன மில்லாத கல்வி. நம் மனமும் ஒழுக்கமும் சீர்பெற்று மறுமையில் நமக்கு ஈடேற்றம் தரக்கூடியதே பிரயோஜனமான கல்வியாகும்.

தீனுல் இஸ்லாத்தின் தத்துவங்களையும், அனுஷ்டான ஒழுக்க முறைகள் என்னும் பிக்ஹு மஸ்அலாக்களையும் கற்றறிந்து அமல் செய்ய வேண்டியது ஒவ்வொரு முஸ்லிமுடையவும் கடமையாகும். இதுதான் இம்மை, மறுமை இரு லோகத்திலும் பிரயோஜனம் தரவல்லது.

இந்த நூலில் ஒவ்வொரு முஸ்லிமும் அறிந்து ஒழுக வேண்டிய எல்லா விஷயங்களும் அடங்கி யிருக்கின்றன. உதாரணமாக ஈமான், இஸ்லாம், கலிமா, பரிசுத்தம், தொழுகை, ஜும்ஆ மகிமை, ஜியாரத்துல் குபூர், ஜக்காத்து, நோன்பு, ஹஜ்ஜு முதலிய மஸ்அலாக்களும், இஸ்லாமிய ஒழுக்கம், ஸுன்னத்தின் சிறப்பு, ஸபருடைய ஒழுக்கம், இபாதத்தின் மகிமை மற்றும் சகலவிதமான போதனைகளும் அடங்கி யிருக்கின்றன.

நல்ல சுத்த தமிழில் இனிய நடையில் எழுதப்பட்ட புதிய நூல்—புதிய பதிப்பு. ஆங்கு அரபு மொழியில் ஓத வேண்டிய கலிமா, துஆ முதலானவைகள் அறபிலேயும் அமைக்கப்பட்டுள்ளன. இதன் அருமை நேரில் பார்த்தால் தான் தெரியும்.
இதன் விலை ரூ. 3

ஷை அறபுத் தமிழ் அல்பத்ஹுர் றப்பானி-பி-பிக்ஹே நிஃமானி
விலை ரூ. 5

கிடைக்குமிடம் :—

ஹாஜி எம். எ. ஷாஹுல் ஹமீது அண்டு ஸன்ஸ்,
நெ. 20, ஹைரோட், திருவல்லிக்கேணி, மதறாஸ் 5.

(79-வது பகுதி)

திருக் குர்ஆன் : : : : : : : : சார சங்கிரஹம்

பல விஷயங்கள் பற்றிய பல ஆயத்துகள்.

(ரஷ்மத் பாகவி)

நய வஞ்சக முனபிகுகளின் முடிவு நரகமே யாகும்.

முனபிக் ஆண்களும், முனபிக் பெண்களும் ஒருவரை யொருவர் இணைந்து (பின்பற்றி) நடப்பவர்களே யாவர். இன்னேர், தமக்குள் கெட்ட காரியங்களின் பக்கமே பரஸ்பரம் அழைத்துக் கொள்வார்கள். நல்ல காரியங்களை விட்டும் (ஜனங்களை) விலக்குவார்கள். (தீயவற்றிற்கே ஆலோசனை சொல்வார்கள்). நல்வழியில் செலவு செய்வதில் உலோபித்தனத்தை காட்டுவார்கள். இன்னேர் அல்லாஹ் (தஆலா)வை மறந்தவர்களாவர்; எனவே அல்லாஹ்வும் இவர்களை (மறந்து) ஒதுக்கிவிடுகிருன். முனபிக்குகள் பாபிகள் என்பதில் சந்தேகமில்லை. இவர்களைக் கொண்டும் காபிர்களைக் கொண்டுமே அல்லாஹ், நரகத்தை நிறப்புவான், இறைவன் அவர்கள் மீது லஃனத்து (சாபக்கேடும்) அனுப்புகிருன். இவர்களின் முடிவு நரக வேதனையாகும்.

(ஜுஸுஉ: வஃலமு; ஸூரா அத்தவ்பா; ருகூ: 9)

கல் விக்கிரஹங்களே சாக்ஷி சொல்லும்.

(முஹம்மத்) நபியே (விக்கிரஹங்களை வணங்கும்) முஷ்ரிக்கு (காபிர்)களை எச்சரிக்கை செய்து விடுவீராக: அந்த (இறுதி கியாமத்து) நாளில் (இறைவனுகிய) நாம் அவர்களை யெல்லாம் (மஹ்ஷர் மைதானில்) சேகரித்து வைத்து ("ஏ காபிர்களே) நீங்களும் உங்களுடைய விக்கிரகங்களும் ஒரு பக்கமாய் ஒதுங்கி தனியே நில்லுங்கள்" என்று கட்டளை யிடுவோம். பிறகு நாம் முஷ்ரிக்குகளுக்கும் (அவர்கள் வணங்கி வந்த கல், செம்பு, பித்தளை) விக்கிரகங்களுக்கு மிடையில் வழக்கை (விரோதத்தை) உண்டாக்கி வைத்து விடுவோம். அதன் பின், (உலகில்) அவர்களுக்கு இணைப்பாக இருந்த விக்கிரகங்கள் (அவர்களை நோக்கி) கூறும் சாக்ஷியமாவது:— "நீங்கள் உலகில் எங்களை (தெய்வமென நம்பி) பூஜித்துக் கொண்டிருந்தீர்களல்லவா? எங்களுக்கும் உங்களுக்கு மிடையில் (இது விஷயத்தில்) அல்லாஹ் (தஆலா) சாக்ஷியாக இருக்கின்ருன். (அப்போது) நீங்கள் எங்களை (பூஜித்து) எதற்காக வணங்கினீர்கள் என்பது எங்களுக்குத் தெரியவே தெரியாது" என்பதாகும்.

(ஜுஸுஉ: யஃததிருன்; ஸூரா: யூனுஸ்; ருகூ: 3)

முஃஜிஸாக்களைப் பரிகாசம் செய்வோர் கதி.

(இறைவனாகிய) நாம் (பண்டைக்காலத்தில், சில சமூகத்தாருக்கு) முஃஜிஸா (என்னும் அற்புதங்கள்) காட்டுவதை நிறுத்தி வைத்துவிட்ட காரணம் யாதெனில்: அவர்கள் (நபிமார்களின்) முஃஜிஸாக்களைப் பொய் என்று சொல்லி நிராகரிக்கலானார்கள்; அதை ஜாலவித்தை (மந்திர தந்திரம்) என்று சொல்லிப் பரிகாசம் செய்யலானார்கள். உதாரணமாக (இறைவனாகிய) நாம், தமூது கூட்டத்தாருக்கு எமது புறத்து அத்தாக்ஷியாக (நபியின் மூலம் முஃஜிஸா செய்து காட்டுவான் வேண்டி) ஒரு (அற்புதமான) பெண் ஒட்டகத்தை அனுப்பி வைத்தோம்; எனினும் (அவர்கள் அதைப போஷிப்பதற்குப் பதிலாக) அதன் மீது கொடுமைகளை இழைக்கலானார்கள். (இறுதியாக அதை அவர்கள் வெட்டிக் கொன்று போட்டார்கள்). (இறைவனாகிய) யாம், (அற்புதமாகிய) முஃஜிஸாக்களை, (விரோதிகளுக்கு) அச்சமுண்டாக்கி வைப்பதற்காக செய்து காட்டி வந்தோம். அந்த மூர்க்க ஜனங்கள் பயந்து பக்தி செய்வதற்குப் பதிலாக அதை எதிர்த்துப் பரிகாசம் செய்யத் தொடங்கி விட்டார்கள். மேலும் வழி கெட்டுப் போய் விட்டார்கள். எனவே முஃஜிஸா அனுப்புவது (அக்காலே) வியர்த்தமாய் விட்டது.

(ஜுஸு: ஸுப்ஹானல்லதீ; ஸூரா: பனீஇஸ்ராயீல்; ருகூ: 6)

நல்லோர்க்கு மரணத்தின் பின் சுகம் உண்டு.

ஈமான் கொண்ட எனது பக்தர்களான நல்லடியார்களே, எனது இந்த (சிருஷ்டிப்பான) பூமி மிக விஸ்தீரணமான (விசாலமான) தாகும். எனவே (பூப்பரப்பில் எங்கு வேண்டுமானாலும்) சென்று பரவி வாழுங்கள். அத்துடன் என்னையே (ஏக தெய்வமாகக் கொண்டு) வணக்கம் புரியுங்கள்.

(பிரபஞ்சத்தில்) உயிர் உடையதான ஒவ்வொரு பிராணியும் மரணம் என்னும் சுவையை அனுபவித்தேயாக வேண்டும். (எல்லா உயிர்களுக்கும் இறுதியில் மரணம் நிச்சயம் உண்டு). மரணத்திற்குப் பிறகு நீங்கள் எமது பக்கம் (ஆகிரத்துக்கு) மீண்டு வந்தே தீர வேண்டும். எனவே யார் ஈமான் கொண்டு (தெய்வ நம்பிக்கையோடு) நல்ல காரியங்கள் புரிந்து வருவார்களோ அவர்களுக்கு மறுமையில் சுவர்க்க பாக்கியத்தை அளித்து சுவர்க்கத்தின் உந்நத மாளிகைகளில் அவர்களை இருக்கச் செய்வோம், அதன் கீழ் (குளிர்ந்த) நீர் ஊற்று ஒலித்து ஓடிக் கொண்டிருக்கும். சுவர்க்க வாசிகள் அதில் சதாகாலமும் (சந்தோஷமாய்) தங்கி யிருப்பார்கள். (ஆஹா) என்ன அருமையான நற்கூலி இது! நல்ல காரியங்கள்

செய்தவர்களுக்குரியதாகும் இது. இன்னும் (உலகத்தில் கஷ்டங்கள், துன்பங்கள்) நேரிட்டபோது (அதைச் சகித்து) பொறுமை அனுஷ்டித்த, இறைவனின் மீது பூரண நம்பிக்கை வைத்திருந்தார்களே அவர்களுக்கும் (நற்கூலியும் சுவர்க்க பாக்கியமும் உண்டு).

(ஜுஸுு: உதலுமா ஊஹிய; ஸூரா: அன்கபூத்; ருகூ: 7)

பெற்ற மக்களும் தேடிய செல்வமும் இறுதியில் உங்களுக்கு பயன் தராது.

(நீங்கள் பிரயாசைப்பட்டு தேடிய) உங்கள் சொத்து செல்வங்களும், (நீங்கள் பிரியமாய் பெற்றெடுத்த) உங்கள் பிள்ளைகளும் உங்கள் இறைவனின் சமுகத்தில் நெருங்க வைக்கும் சாதனங்களாக மாட்டாது. ஆனால் ஈமான் கொண்டு நல்ல காரியங்கள் செய்தவர்களுக்கு மட்டும் (அவர்கள் சொத்தும், மக்களும்) பயன்படுவதோடு நல்அமல்களுக்கான இரட்டிப்பு நற்கூலி கொடுக்கப்படும் அவர்கள் சுவர்க்கத்தில் (ஆனந்த மாளிகையின்) உப்பரிகையில் தங்கி யிருப்பார்கள். எனவே யார் எமது (ஆயத்துகளான) அத்தாக்ஷிகளை (மறுத்து) நிராகரித்து விடுகிறார்களோ அவர்கள் கடுமையான வேதனையில் கிடந்து உழல்வார்கள்.

(ஜுஸுு: வமன் யக்னுத்; ஸூரா: ஸபா; ருகூ: 5)

தூக்கமும் மரணத்தின் ஒரு நிலைமையே யாகும்.

(உலக வாழ்வில்) ஜனங்களுக்கு மரண காலம் நேரிடும்போது, அல்லாஹ் (தஆலா) அவர்களுடைய ரூஹ்களை (உயிர்களை) கைப்பற்றிக் கொண்டு விடுகின்றான். மரணம் சம்பவிக்காமல் (இரவில்) தூக்கத்தில் ஆழ்ந்து விடுபவர்களின் ரூஹும் (உயிர்களும்) இறைவனின் ஆதிக்கத்திலாகி விடுகின்றன. (இந்நிலைமையில்) யாருடைய மரண காலம் சம்பவித்து விடுகிறதோ அவர்களுடைய உயிர்களை அல்லாஹ் (தஆலா) தடுத்துத் தன் ஆதிக்கத்திலேயே வைத்துக் கொண்டு விடுகிறான். அங்ஙனம் மரண காலம் சம்பவிக்காத ரூஹ்களை இன்னும் கொஞ்ச காலத்தவணைக்காக (உலக வாழ்வில் இருக்கட்டும் என்று) திரும்ப அனுப்பி வைத்து விடுகிறான். எனவே, பகுத்துணரும் விவேகியானவர்களுக்கு (அல்லாஹ்வுடைய குத்ரத்தின் சின்னமான) இந்த (மவுத்து—ஹயாத்) விஷயத்தில் நல்ல படிப்பினைகள் இருக்கின்றன.

(ஜுஸுு: பமன் அழலமு; ஸூரா: ஜுமர்; ருகூ: 5)

(குறிப்பு:— "தூக்கமானது மரணத்தின் தங்கையாகும்" என்று அரபியில் சொல்லப்படுகிறது. எனவே, தூக்கமும் ஒரு வகையான மரண நிலைமையே ஆகும். ஆழ்ந்த நித்திரையின் போது மனிதனுக்குச் சித்த சுவாதீனம் இருப்பதில்லை; அவனுக்கு என்ன

நேரிட்டாலும் உணர்வும் தடுத்தாட் கொள்ளும் தண்மையும் கிடையாது. யாரையும் அருகில் நெருங்க விடாத பயில்வானையும், அவன் தூங்கிக் கொண்டிருக்கும் ஒரு சிறுவனும் தாக்கி விடுவான்.

தூக்கத்தின் போது, ரூஹ் என்னும் உயிரானது உடலுக்கும் இறைவனுடைய கைப் பிடிக்குமிடையில் ஊசலாடிக் கொண்டிக்கிறது. இறைவன் நாடினால், அந்த உயிரை உடலுக்குள் திருப்பி அனுப்பாமல் தடுத்து வைத்துக் கொள்ளலாம். தூக்கத்திலே மரணம் நேரிடுவது இந்த நியதியின்படியாகும். எனவே தூக்கமும் ஒருவகையான மரண நிலைமையேயாகும். தூக்கத்தினை உதாரணமாகக் கொண்டு மாந்தர் மரணத்தைப்பற்றி எச்சரிக்கையாக இருக்கக் கடவர்.)

கியாமத்தில் காபிர்கள் புலம்பி அழுவார்கள்.

(உலகில் காபிர்களாய் இருந்து) கியாமத்தையும் (இறைவனின் மகாத்மியத்தையும்) நிராகரித்துக் கொண்டிருந்த (பாபியான)வர்களை நோக்கி கியாமத்தில் அறிவுறுத்தப்படும். (அதாவது) "இன்று நீங்கள் உங்கள் அவல வாழ்வைப்பற்றி வெறுப்படைவதைப்போல் உலகில் நீங்கள் இறைவனின் (சன்மார்க்க) விஷயம் பற்றியும் வெறுப்புற்று (ஒதுங்கி) கிடந்தீர்கள். (உலகில் உங்கள் போக்கானது எப்படி இருந்ததெனில்) நீங்கள் ஈமானின் பக்கம் (இஸ்லாத்தின் பக்கம்) அழைக்கப்படும் போது, நிராகரித்து (துன்மார்க்கத்தின் பக்கம் விரைந்து) சென்றீர்கள். (என்று அறிவுறுத்தப்படும்) இதற்கு காபிர்கள் மறுமொழியாக "அந்தோ, நாங்கள் இரண்டு விடுத்தம் மாணிக்கச் செய்யப்பட்டோம். இரண்டு முறை உயிர்ப்பித்து எழுப்பப்பட்டோம். (ஒன்று உலகில், மற்றொன்று ஆகிரத்தில்) இறைவனே! எல்லாம் உன்னுடைய மகாத்மியம் (குத்ரத்து தான்) பெரிது. இப்போது நாங்கள், எங்கள் பாபக்கிருத்தியங்களைப் பற்றி ஒத்துக் கொண்டு விடுகிறோம். இப்பெரும் துன்பங்களை விட்டும் நீங்குவதற்கு எங்களுக்கு ஏதேனும் மார்க்கம் (பரிகாரம்) உண்டா?" என்று கேட்டுப் புலம்புவார்கள். (இல்லை) ஒரு பரிகாரமும் கிடையாது என்று கடுமையாக பதில் சொல்லப்படும். "உலகில் நீங்கள் சன்மார்க்கத்தில் அழைக்கப்படும் போது நிராகரித்துச் சென்றீர்களே, பொய்யானவைகளை மெய்யென நம்பி வணங்கினீர்களே" நீங்கள் ஏற்றுக் கொண்டிருந்தால் நற்கதி பெற்றிருப்பீர்களே என்று பதில் சொல்லப்படும். இது அல்லாஹ்வின் மகத்தான கட்டளையாகும்.

(ஜுஸ்வு: பமன் அழ்லம; ஸூரா: முஃமின்; ருகூ: 3)

Edited by M. S. ABDUL KHUDUS.
Published by Hajee M. A. Shahul Hameed & Sons.
Printed at Shahul Hameedia Press, Madras.

நஸ்ஹுல் ஹதீது, வபத்ஹுல் மஜீது

புதிய மூன்றாம் பதிப்பு

இவ்வுலகில் இன்ஸானாகப் பிறந்த ஒவ்வொருவரும், சிருஷ்டிக் கர்த்தாவாகிய அல்லாஹு தஆலாவை அறிந்து ஹகீகத்தை உணர்ந்து இபாதத்து செய்ய வேண்டியது அத்தியாவசியக் கடமை. இதற்கு இல்மு, ஒழுக்கம், ஈமான், இஸ்லாம், அமல், ஷரீஅத் முதலிய முஆமலாத்து களைத் தெரிந்து கொள்ள வேண்டியது முதற்பெருங் கடமையாகும்.

இந்த அரிய பெரிய நூலாகிய "நஸ்ஹுல் ஹதீது வபத்ஹுல் மஜீது" என்பது நமது நபிகள் நாயகம் ரஹ்மத்துல்லில் ஆலமீன் ரஸூலுல்லாஹி ஸல்லல்லாஹு அலைஹி வஸல்லமவர்கள் திருவாய் மலர்ந்தருளிய ஹதீதுகளென்னும் திருவாக்கியங்களைக் கொண்டும், ஸஹாபாக்கள், ஒலிமார்கள் ஸாலிஹீன்கள் நாதாக்களுடைய நஸீஹத்துகள், ஹிக்காயத்துகள் முதலிய உபதேச உபமேய ஆகமங்களை ஆதாரமாகக் கொண்டும், தீனுல் இஸ்லாத்தின் எல்லா மஸ்அலாக்களையும், விஷயங்களையும் தத்துவங்களையும் எடுத்தோதும் அற்புதமான நூலாகும். இந்த ஒரு கிதாபு மட்டும் கையில் யிருந்து விட்டால் தமிழ் முஸ்லிம்களுக்கு வேறெந்த கிதாபின் தேவையும் இராது. அதாவது இதில் இல்லாத விஷயமே இல்லையென்று சொல்லலாம். இதன் அருமை நேரில் பார்த்தாலே தெரிய வரும்.

இதன் விலை ரூ. 9-60

கிடைக்குமிடம்:

ஹாஜி எம். எ. ஷாஹுல் ஹமீது அண்டு ஸன்ஸ்,
நெ. 20, ஹைரோட், திருவல்லிக்கேணி, மதறாஸ் 5

தப்ஸீறுல் ஹமீத் பீ தப்ஸீரில் குர்ஆனில் மஜீத்.

நமது நாயகம் (ஸல்) அவர்களுக்கு அருளப்பட்ட திருக் குர்ஆனே உலக மக்கள் அனைவருக்கும் பொது வேதமாகவும், இஸ்லாம் மார்க்கத்திற்கு ஆதாரமாகவும் இருந்து வருகிறது. முஸ்லிம்கள் இஸ்லாம் மதத்திற்கு ஆதாரமாயுள்ள திருக்குர்ஆனின் கட்டளைகளையும் அரிய போதனைகளையும் தெரிந்து கொள்வது அவசியமாகும். இஃது திருக்குர்ஆனின் **தப்ஸீரை தமிழ் பாஷையில் ஸுன்னத்து வல் ஜமாஅத்தின்** உலமாக்களாலும் இமாம்களாலும் எழுதப்பட்ட தப்ஸீர்களை ஆதாரமாகக் கொண்டு, எழுதப்பட்டது.

இந்த தப்ஸீரில் குர்ஆன் ஆயத்துகளை அறபியில் அழகாக எழுதி போட்டோ பிளாக் செய்யப்பட்டு தனித்தனியாக ஆங்காங்கு அமைத்தும் அதன் கீழ் சரியான தர்ஜுமாவும், தப்ஸீர் என்னும் விரிவுரையும், வியாக்யானமும், ஷஃனு நுஸூல் என்னும் ஒவ்வொரு ஆயத்தும் இறங்கிய காரணங்களும், அதற்கேற்ப ஹதீது, ரிவாயத்து, ஹிக்மத்து, பாயிதா, கிஸ்ஸா, அஜீபா முதலிய அரும் பெரும் ஆதாரங்களும் ஒருங்கே சேர்த்து அமைக்கப் பெற்றிருக்கின்றன.

முதல் பாகம்: ஸூறத்து பாத்திஹா—பகருவிலிருந்து ஸூறத்துன்னிஸா முடிய (ஒரு மன்ஸில்) 5¾ ஜுஸு வரை விலை ரூ. 10

இரண்டாம் பாகம்: ஸூறத்துல் மாயிதா முதல் ஸூறத்துத் தவ்பா முடிய விலை ரூ. 10

மூன்றும் பாகம்: ஸூரே யூனுஸ் முதல் ஸூறத்துந் நஹ்ல் முடிய 7-ஸூறாக்களின் தப்ஸீர் விலை ரூ. 10

நான்காம் பாகம்: ஸூரத்துல் இஸ்ராஉ முதல் ஸூறத்து நூர் முடிய 8-ஸூராக்களின் தப்ஸீர் விலை ரூ 10

ஐந்தாம் பாகம்: ஸூறத்து புர்க்கான் முதல் ஸூறத்து யாஸீன் முடிய 12-ஸூராக்கள். விலை ரூ. 12

ஆறும் பாகம்: ஸூறத்து ஸாப்பாத் முதல் ஸூறத்து ஹுஜ்ராத் முடிய 13-ஸூராக்கள். விலை ரூ 12

ஏழாம் பாகம்: சூறே காப் முதல் ஸூறத்து நாஸ் வரை 65-ஸூறாக்கள் விலை ரூ. 16

ஹாஜி எம். ஏ. ஷாஹுல் ஹமீது அண்டு ஸன்ஸ்,
நெ. 20, ஹைரோட், திருவல்லிக்கேணி, மதராஸ் 5

F